பக்கங்கள்:21 | விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 13 ஞாயிற்றுக்கிழமை 27.03.2022 கதிர் 142


### இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான சமரச முயற்சிகளை தொய்ய விடாமல் தொடர்வதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மிக உறுதியாக இருக்கின்றார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

புலம்பெயர் ☞2

## கூட்டமைப்பினரை எதிர்க்கின்றோம்; தமிழர்களை அரவணைக்கின்றோம்!

### இப்படிக் கூறுகின்றார் கம்மன்பில



நாம் தமிழர்களுக்கு எதிரானவர்கள் அல்லர். அவர்கள் எம்முடன் இணையலாம்.

– இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதயகம்மன்பில எம்.பி. தெரிவித்தார்.

இதுதொடர்பில்ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

ஆயுதம் மூலம் ☞2

# வழங்கிய வாக்குறுதிகள் காற்றில் பறந்த வரலாற்றை சம்பந்தன் மறக்கக் கூடாது!

## ஜனாதிபதி – கூட்டமைப்பு பேச்சு தொடர்பில் ஸ்ரீகாந்தா கருத்து



பௌத்த – சிங்களப் பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஜனாதிபதியும் மற்றும் பிரதமர் உட்பட ஏனைய பிரதான அமைச்சர்களும் கைவிடுவார்கள் என்று எங்களில் யாராவது நம்பினால், அதைவிட அரசியல் அறியாமை வேறு இருக்கவே முடியாது. சிங்கள ஆட்சித் தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கிய வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் உட்பட தமிழர்கள் எவரும் மறந்துவிட முடியாது.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ந.ஸ்ரீகாந்தா தெரிவித்தார். ☞2

## சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை நேற்று வெளியீடு

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை தொடர்பான 'உறுப்புரை 4' ஆலோசனை மற்றும் பணிக்குழாம் அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அதன் நிறைவேற்று அதிகாரியின் இலங்கை தொடர்பான அறிவித்தலும் இந்த அறிக்கையில் உள்ளடங்கியுள்ளது. ☞21

## நாளை அமைச்சரவையில் முன்வைப்பு; சபையிலும் விவாதம் நடத்தத் தீர்மானம்

இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை வெளிவந்துள்ள நிலையில், அது நாளை அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது.

அதேவேளை, இந்த அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்திலும் விவாதம் இடம்பெறவுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் ☞21

## போக்குவரத்துத் திணைக்களம் யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவை



மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண மோட்டார் ☞21

## 30இல் 'பிம்ஸ்டெக்' மாநாடு; இலங்கை வந்தார் செயலர்

### நாளை வருகின்றார் இந்திய வெளிவிவகார அமைச்சர்

'பிம்ஸ்டெக்' அமைப்பின் அரச தலைவர்கள் மாநாடு எதிர்வரும் 30 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், ☞21

## அரசுக்கு எதிராகப் பிரேரணை

### 11 கட்சிகள் அணி ஆலோசனை

அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவது தொடர்பில் 11 கட்சிகள் அணி ஆலோசனை நடத்தி வருகின்றன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ☞21

# கோட்டாவுடனான சந்திப்பைப் புறக்கணித்த ரெலோ தமிழ்க் கூட்டமைப்பிலிருந்து வெளியேற வேண்டும்!

## கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்து



அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்ற ரெலோ, ஜனாதிபதியுடனான சந்திப்பை ஏன் புறக்கணித்தார்கள் என்பது கேள்விக்குறியே! அவ்வாறெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ வெளியேற வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு ☞21



eDUS Online School with GLOBAL STANDARDS

சிறந்த Online கல்விக்கான நிரந்தர தீர்வு..!!

English & Tamil Medium

அனைத்து பாடங்களுக்குமான ஒன்லைன் வகுப்புகள் எம்மிடமிருந்து.

தரம் 1-5 (Primary) தரம் 6-11 (Secondary) G.C.E A/L



Enroll Now

Admissions

www.edus.lk

0777 123 330

அனைத்து பெற்றோர் மாணவரினதும் நம்பிக்கைக்குரிய ஒன்லைன் கல்விச்சேவை..!

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழர்களை தாயகத்தில் முதலீடு செய்யுங்கள், பாதுகாப்பு உத்தரவாதம் தாம் தருகின்றார் என்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் விசேட செய்தி இன்று கொழும்பு தமிழ் வார இதழ் ஒன்றில் முற்பக்கத் தலைப்பாக பிரசுரமாவதாக அச்சகத் தகவல்கள் தெரிவித்தன.

அந்தப் பத்திரிகையின் ஆசிரியருக்கு அந்தத் தகவலை – செய்தியை – ஜனாதிபதியே தொடர்பு கொண்டு வழங்கினார் என நான் அறிந்தேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேற்று முன்தினம் தாம் நடத்திய மூன்று மணி நேர கலந்துரையாடல் குறித்து – முதல் சுற்றுப் பேச்சுப் பற்றி – தமிழ் ஊடகங்களில் வெளிவந்த தகவல்கள், கூட்டமைப்புத் தலைவர்களின் பிரதிபலிப்புகள் குறித்து, நான் நேற்று என் பத்தியில் குறிப்பிட்ட மூத்த தமிழ்ப் பத்திரிகை யாளருடன் நேற்றுக் காலையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தொடர்பு கொண்டு கேட்டறிந்தார் என்பதையும் என்னால் அறிய முடிந்தது.

மொத்தத்தில் ஜனாதிபதி இந்த விடயத்தில் இப்போது மிகுந்த சிரத்தையாக இருக்கின்றார் என்பது மட்டும் உண்மை.

இந்த ஊடாட்டம் முறியாமல் தொடர்ந்தால் யாருக்கு நன்மை? யாருக்கு நஷ்டம்?

முதலில் நம்மூர் அமுல் பேபிக்குப் பாதிப்பு என்பது நிச்சயம். அமுல்பேபியின் கொட்டம் அடங்குவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி – கூட்டமைப்பு சந்திப்பின் போது புலம்பெயர் தமிழர்கள் வடக்கு – கிழக்குத் தாயகத்தில் முதலீடு செய்வது குறித்துப் பூர்வாங்கமாக ஆராயப்பட்டது. அப்போது மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

"ஏற்கனவே புலம்பெயர் தமிழர்கள் பலர் மட்டக்களப்பில் மூதலீடுகளைச் செய்யத் தயாராக வந்தனர். ஆனால் மட்டக்களப்பின் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைமை தன்னுடைய கைப்பொம்மைகளுக்கு மட்டும் இடமளித்து, ஏனையோரைத் தடுத்து வருகிறது." – என்றார் சாணக்கியன்.

யார் என்று துருவி விசாரித்தார் ஜனாதிபதி.

"சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்)" என்று பதிலளித்தார் சாணக்கியன்.

அடுத்து "யாழ்ப்பாணத்தில் இவ் விடயத்தில் நிலைமை என்ன?" –என்று கேட்டார் ஜனாதிபதி.

"யாழ்ப்பாணத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூடினால்தானே இவை குறித்துப் பேசுவதற்கு...?'' – என்ற சாரப்பட பதிலளித்தார் சுமந்திரன்.

குறுக்கிட்ட பிரதமர் "யார் தலைவர்?" –என்று தெரியாதவர் போல கேட்டார்.

"அங்கஜன் இராமநாதன்" – என்று கூட்டமைப்பினர் பதில் தந்தனர். உடனே ஒரு கேள்வி எழுப்பினார் ஜனாதிபதி.

"இந்தப் பதவிகளை நீங்களே (கூட்டமைப்பினரே) எடுத்து மேற்கொள்ளலாம். மேற்கொண்டிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் இவ்வாறான முறைப்பாடுகள் வர மாட்டாவே. நீங்கள்தான் என்னோடு சேர்ந்து பணியாற்ற முன்வரவில்லையே...!" – என்று விசனித்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

உடனடியாக பதிலடி தந்தார் சுமந்திரன்.

"இல்லை, ஜனாதிபதி அவர்களே! இந்தப் பதவியை ஏற்று நாங்கள் செயற்பட மாட்டோம் என்று எப்போதாவது நாங்கள் கூறியிருக்கின்றோமா? அது நீங்கள் செய்யும் நியமனம். முழு உரித்தும் தீர்மானமும் முடிவும் உங்களுடையவை. ஆனால் நாம் அவற்றை ஏற்றுக் செயற்பட மாட்டோம் என்று ஒரு போதும் கூறவேயில்லையே." – என்று ஆணித்தரமாகக் கூறினார் அவர்.

ஒரு கணம் கண்ணை மூடி அந்தக் கருத்தை செவிமடுத்து உள்வாங்கினார் ஜனாதிபதி.

எனக்கு என்னவோ, ஜனாதிபதி – கூட்டமைப்பு பேச்சு சுமுகமாகத் தொடர்ந்தால் பல தமிழ் மாவட்டங்களின் மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவர் பதவிகளில் இணைத் தலைமையாக (தற்போது இணைத்தலைவராக இருக்கும் ஆளுநருடன் மேலதிகமாக ஒருவர் சேர்க்கப்படும் விதத்தில்) மாற்றம் வரும் என்று தோன்றுகின்றது.

அமுல்பேபி, பிள்ளையான்கள் பாடு அப்போது நெருக்கடியாகத்தான் இருக்கும்.

நேற்றுமுன்தினம் பேச்சில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்டிய – உடனடியாக அவசரத் தீர்வு காண வேண்டிய – நான்கு விடயங்களின் போக்கில்தான் இந்த சமரசப் பேச்சின் முன்னேற்றம் இருக்கும் என்பது வெளிப்படையானது.

அதில் முதலாவது – அரசியல் கைதிகள் விவகாரம். அது தொடர்பில் இப்போது பந்து அரசின் பக்கத்தில் இல்லை. சுமந்திரனின் களத்தில்.

தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் தாம் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று ஒவ்வொரு கைதி தொடர்பிலும் தனித்தனியாக ஆராய்ந்து சட்டத்தில் தமக்கு இருக்கும் உபாயத்தைப் பரிந்துரையாகத் தாருங்கள் என்று பந்தை சுமந்திரன் – நீதி அமைச்சர் அலி சப்றி ஆகியோரின் களத்தில் தூக்கி அடித்து விட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

சரியோ, பிழையோ நீதி அமைச்சர் அலி சப்றியும் ஒரு சிறுபான்மை சமூகத்தவர். சுமந்திரன் போல ஜனாதிபதி சட்டத்தரணி. அவரைப் போலவே அரசியல் கைதிகள் விடுதலையில் சிரத்தை கொண்டவர். சுமந்திரனின் நண்பரும் கூட.

இந்தக் கைதிகள் விடயத்தில் சட்டத்தின் படி ஜனாதிபதி என்ன செய்ய முடியும், செய்யலாம் என்று இருவரும் சேர்ந்து பரிந்துரை கொடுக்கும் வரை இவ்விவகாரத்தில் விடயம் முன் நகரவில்லை என்று ஜனாதிபதியைக் குறை கூற முடியாது.

சட்ட வல்லுநர் சுமந்திரனுடன் நல்லுறவுடன் செயற்படும் மற்றொரு சட்டவறிஞர் நீதி அமைச்சர் அலி சப்றி.

இவ் விடயத்தில் அலி சப்றியை இழுத்து வந்து மேசையில் அமர்த்தி, விடயங்களை ஆராய்ந்து, சாத்தியமான பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு விரைந்து கொடுப்பது சுமந்திரனின் பொறுப்பு.

ஆக, இந்த விடயத்தில் பந்து இப்போது சுமந்திரனின் களத்தில். அரசுத் தரப்பைப் பார்த்து அவரோ, பிற தமிழர் தரப்புகளோ இன்றைய நிலையில் குறை கூற முடியாது.

பார்ப்போம், சுமந்தின் எவ்வளவு விரைவாகக் காரியமாற்றி, இதனைச் சாதிக்கப் போகின்றார் என்று...? இது சுமந்திரனின் சட்டத்துறைப் பணிக்கு ஒரு சவால்.

24 வருடங்களாக சிறையில் வாடுபவர்களை மேலும் 24 மாதங்கள் இவர்களும் (சுமந்திரன் – சப்றி இணை) வாட விடப் போகின்றார்களா? அல்லது 24 நாள்களுக்குள் பரிந்துரை அறிக்கையைச் சமர்ப்பிக்க போகின்றார்களா? பார்ப்போம்.

இதில் ஜனாதிபதி கோட்டாபய பந்தைத் தந்திரமாகத்தான் விளையாடுகின்றார்.

சட்டத்தின்படி நான் என்ன செய்யமுடியுமோ, என்ன செய்ய வேண்டுமோ என்பதை ஆராய்ந்து பரிந்துரையாகத் தாருங்கள் என்று ஜனாதிபதி கூறிவிட்டார்.

அதன் பின்னர், அலி சப்றி – சுமந்திரன் இணை கொடுக்கும் பரிந்துரைக்கு அப்பால் போய் யாரையும் விடுவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை ஜனாதிப தியின் மீது அரசியல் ரீதியாக எவரும் சுமத்த முடியாது. அந்தப் பரிந்துரைப்படி இவ்வளவு தான் ஜனாதிபதி செய்ய முடியும் என்பது தமிழர் தரப்புப் பிரதிநிதியாக சுமந்திரனினாலும் அங்கீகரிக்கப் பட்டதாகி விடும் என்பதையும் நாம் மறக்கக் கூடாது.

– மின்னல் –

---

## கூட்டமைப்பினரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அடைய முடியாமல்போனதை டொலர் மூலம் பெறத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முற்படுகின்றனர். இந்த அரசியலையே நாம் எதிர்க்கின்றோம். மாறாக தமிழ் மக்களை எதிர்க்கவில்லை. அவர்களும் எமது பயணத்தில் இணையலாம்.

இந்த நாட்டில் மீண்டும் குடும்ப ஆட்சி ஏற்பட இடமளிக்கமாட்டோம் – என்றார்.

## வாக்குறுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேற்றுமுன்தினம் நிகழ்ந்த உயர்மட்ட பேச்சுகளில், அரச தரப்பால் மேலோட்டமான முறையில் வாக்குறுதிகள் தாராளமாக வழங்கப்பட்டிருக்கும் நிலையில், தமிழர் தாயகமான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அரசின் சார்பில் நிகழ்த்தப்பட்டு வந்திருக்கும் சகல அத்துமீறல்களும் அடாவடி நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்படாத வரையில், இந்த வாக்குறுதிகள் எல்லாம் விரைவில் அர்த்தம் அற்றுப் போய்விடும்.

அத்துடன், அரசியல் சாசனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை உடனடியாக முன்னெடுப்பதிலும், நீண்ட பல வருடங்களாகச் சிறைக்குள் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை, காலதாமதம் செய்யாமல் விரைவாக விடுவிப்பதிலும் அரசுக்கு எந்தத் தடையும் இருக்க முடியாது.

இந்த விவகாரங்களில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளே அரசிடம் எதிர்பார்க்கப்படுகின்றன.

அடுத்து வரும் ஒரு சில வாரங்களில் தனது வாக்குறுதிகளின் விடயத்தில் அரசு தன்னைத்தானே நிரூபித்தாக வேண்டும்.

காலத்துக்குக் காலம் சிங்கள ஆட்சியாளர்கள் தமது உடனடி அரசியல் தேவைகளுக்காக வழங்கிச் சென்ற வாக்குறுதிகள் எல்லாம் தமிழர் மனங்களில் இப்பொழுதும் பசுமையாகவே உள்ளன.

1977இல், அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் காலத்தில் இருந்து 40 வருடங்கள் கழித்து சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலம் வரையில், தேர்தலில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் தலைமைகளுக்கு சிங்கள ஆட்சித் தலைவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கிய வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டமையைக் கூட்ட மைப்புத் தலைவர் சம்பந்தன் உட்பட உரிமை கோரும் தமிழர்கள் எவரும் மறந்து விட முடியாது.

வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்கள் சிக்கி திணறிக் கொண்டிருக்கும் இலங்கை அரசுக்கு இந்தியாவின் உதவியும், அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்குலக நாடுகளின் ஆதரவும் அவசரமாகத் தேவைப்படும் இக்கட்டான இந்த நேரத்தில், தமிழர்களைத் தான் அனுசரித்துப் போவதான ஒரு தோற்றப்பாட்டைக் காட்டுவதற்கு அது முயற்சிக்கின்றது என்பது தெட்டத்தெளிவானது.

தமது பௌத்த, சிங்கள பேரினவாத நிகழ்ச்சி நிரலை ஜனாதிபதியும் மற்றும் பிரதமர் உட்பட ஏனைய பிரதான அமைச்சர்களும் கைவிடுவார்கள் என்று எங்களில் யாராவது நம்பினால், அதைவிட அரசியல் அறியாமை வேறு இருக்கவே முடியாது.

காணமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் விவகாரத்தில், இந்த அரசு எதுவும் செய்ய மாட்டாது. அப்படிச் செய்வதாக, இருந்தால் தமக்குத் தாமே படுகுழி தோண்டுவதாகவே அது இருக்கும் என்பதும் அரச தலைவர்களுக்கு நன்கு தெரியும். அதனால்தான் காசைத் தந்து, கண்ணீர் விடும் உறவுகளின் வாய்களை மூட வைக்கலாம் என்ற முட்டாள்த்தனமான சிந்தனை மேலோங்கி நிற்கின்றது.

இந்தநிலைமையில், தமக்குள் பரஸ்பர விமர்சனங்களையும், குற்றச்சாட்டுக்களையும் தமிழர் தரப்பு தவிர்த்துக் கொண்டு, இன்றைய சூழ்நிலையை இனி எப்படி பயன்படுத்துவது என்று சிந்திக்க வேண்டும்.

விசுவாசத்துடன் சொல்வதானால், அடுத்தகட்ட பேச்சு என்பது நடக்குமாக இருந்தால், எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தபோது உத்தியோகபூர்வமாக தனக்கு வழங்கப்பட்டு, இப்பொழுதும் அரசின் தயவில்தான் தொடர்ந்து வசித்து வரும் ஆடம்பர அரச மாளிகையை மீண்டும் அரசிடம் கையளித்து விட்டு, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற முறையில் தனக்கு தரப்பட வேண்டிய அரச குடியிருப்புத் தொகுதி வீடு ஒன்றிலிருந்து, அந்தப் பேச்சில் கலந்துகொள்ள சம்பந்தன் வர முடியுமாக இருந்தால், பேச்சு மேசையில் அவரின் ஆக்ரோசக் குரலுக்குப் பல மடங்கு பலம் சேரும்.

ஏற்கனவே, பேச்சில் கலந்துகொள்ள நிபந்தனை விதிக்கப்பட வேண்டும் என்ற ரெலோவின் நிலைப்பாடு, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனாலும் அதன் ஏனைய இரண்டு கட்சிகளாலும் நிராகரிக்கப்பட்ட நிலையில், அதிலிருந்து ரெலோ ஒதுங்கி நின்றதன் மூலம், பேச்சு மேசையில் சம்பந்தனின் குரலுக்கு எதிர்மறையான முறையில் வலுச் சேர்க்கப்பட்டிருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும் – தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ரூபா பெறுமதி வீழ்ச்சியை தடுக்க பணச்சபை முறைமையே தீர்வு!

## பிரபல அமெரிக்க பொருளியலாளர் ஆலோசனை



அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 203 இலிருந்து 290 வரையில் வீழ்ச்சியடைந்துள்ளது. ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்கு இலங்கை 'பணச்சபை முறைமையை' ஸ்தாபிப்பது அவசியம் என்று அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல பொருளியலாளர் ஸ்டீவ் ஹன்க் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஸ்டீவ் ஹன்க், மிகமோசமடைந்துவரும் இலங்கையின் பொருளாதார நிலைவரம் தொடர்பில் கடந்த சில வாரங்களாக அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவுகளைச் செய்துவருகின்றார். அவ்வாறு செய்திருக்கும் பதிவொன்றிலேயே அவர் மேற்கண்ட விடயம் தொடர்பாக வலியுறுத்தியுள்ளார்.

'இவ்வாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி 26 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கை முகங்கொடுத்திருக்கக்கூடிய டொலர் பற்றாக்குறையும் எரிபொருள் விலையேற்றமும் அந்நாட்டுக்கு பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன என்று ஸ்டீவ் ஹன்க் அந்தப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இந்த நெருக்கடியின் தீவிரத் தன்மையைக் குறைப்பதற்கு இலங்கையில் கடந்த 1884 தொடக்கம் 1950 ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்த 'பணச்சபை முறைமை' மீண்டும் உருவாக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுத்தியுள்ளார்.

இலங்கை சிலோன் என்று அறியப்பட்ட காலப்பகுதியில் பணச்சபை முறைமை நடைமுறையில் இருந்ததுடன் 1950 ஆம் ஆண்டில் அந்த முறைமை நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாக மத்திய வங்கி ஸ்தாபிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 01.04.1988 மதம் - இந்து
ஜாதி - -V பெண் நட்சத்திரம் - உத்தரம் 3 இல்
கி.பா - 15 செவ் - 9 இல்
தகைமை - B.Com தொழில் - D.O அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை, வெளிநாட்டு மணமகன்

பிறந்த திகதி - 25.04.1988 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - ஆயிலியம்
கி.பா - 69 செவ் 7 இல்
தகைமை - B.Com தொழில் - Post master
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 11.11.1990 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - பூரம்
கி.பா - 29 செவ் 5 இல்
தகைமை - B.SC தொழில் - அரச சேவை கொழும்பு
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 16.04.1991 மதம் - இந்து
ஜாதி -V பெண் நட்சத்திரம் - பரணி கி.பா - 22
செவ் 2 இல் தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Eng அரச சேவை மணமகன்
(அச்சுவினி, சுவாதி, விசாகம்)

பிறந்த திகதி - 08.12.1990 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - மகம்
கி.பா - 24 செவ் 8 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Eng அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 05.04.1994 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருவோணம்
கி.பா - 14 செவ் 9 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor மணமகன் மட்டும்

பிறந்த திகதி - 08.07.1986 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - புனர்பூசம் 4 இல்
கி.பா - 43 செவ் 7 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு -Doctor, Eng சிங்கப்பூர் மணமகன்

பிறந்த திகதி - 07.08.1985 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 35 செவ்/சூரி 5 இல்
தகைமை - M.B.B.S தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Eng; Bank Manager மணமகன்

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 14.06.1993 மதம் - இந்து
ஜாதி - K பகுதி நட்சத்திரம் - ரேவதி கி.பா - 52
செவ் - 10 இல் தகைமை - B.Sc, M.Sc Civil Eng
தொழில் -Company Work
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 30.02.1980 மதம் - இந்து
ஜாதி -K பகுதி நட்சத்திரம் - அவிட்டம் 4 இல்
கி.பா - 55 செவ் - 8 இல்
தகைமை - B.A தொழில் - D.O அரச சேவை
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 18.09.1987 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - பூசம் 2 இல் கி.பா - 28
செவ் - 10 இல் தகைமை - B.Sc in Civil Eng
தொழில் - சிங்கப்பூர் Work
எதிர்பார்ப்பு - பட்டதாரி அழகான மணமகள்

பிறந்த திகதி - 25.06.1994 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தராடம்
கி.பா - 39 செவ் 2 இல்
தகைமை - G.C.E (A/L) தொழில் - Dialog Company
எதிர்பார்ப்பு - வெளிநாட்டு PR உள்ள மணமகள்

பிறந்த திகதி - 13.03.1989 மதம் - இந்து
ஜாதி -V ஆண் நட்சத்திரம் - ரோகிணி கி.பா - 36
செவ் 1 இல் தகைமை - G.C.E (A/L) தொழில் - Business
எதிர்பார்ப்பு - உள்நாடு, வெளிநாடு, France மணமகள் தேவை

பிறந்த திகதி - 18.10.1985 மதம் - இந்து ஜாதி - V ஆண்
நட்சத்திரம் - கேட்டை 3 இல் கி.பா - 42 செவ் 7 இல்
தகைமை - G.C.E (A/L) தொழில் - சொந்தக் கடை
எதிர்பார்ப்பு - A/L மணமகள் சீதனம் பெரிதாக எதிர்பார்க்கப்படவில்லை

பிறந்த திகதி - 25.11.1988 மதம் - இந்து ஜாதி - V ஆண்
நட்சத்திரம் - மிருகசீரிடம் 2 இல் கி.பா - 53 செவ் 2 இல்
தகைமை - Electric Engineer
தொழில் - சொந்தக் Company
எதிர்பார்ப்பு - A/L மணமகள் சீதனம் பெரிதாக எதிர்பார்க்கப்படவில்லை


பிறந்த திகதி - 22.01.1986 மதம் - இந்து ஜாதி -V ஆண்
நட்சத்திரம் - ரோகிணி 4 இல் கி.பா - 23
செவ் 11 இல் தகைமை - Finance Manager
தொழில் - Accountant கட்டார்
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள் காரைநகர் முன்னுரிமை

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.









காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கொழும்பின் ஓரவஞ்சனை

வடக்கு, கிழக்கு என்றால் கொழும்பு அரசுக்கு ஓர வஞ்சனைதான். அபிவிருத்தி உட்பட எல்லா விடயங்களிலும் பாகுபாடும் புறக்கணிப்பும் இலங்கை அரசின் பரவணிப் பழக்க வழக்கமே.

'ஒரு கண்ணில் வெண்ணெய், மறுகண்ணில் சுண்ணாம்பு' என்ற மாதிரித்தான் கொழும்பு எப்போதும் நடந்து கொள்ளும்.

யுத்தத்தின் பின்னர் வடக்கு, கிழக்கில் உள்கட்டுமானங்களைத் தாங்களே பெரிய அளவில் அமைத்தார்கள் என்று ராஜபக்ஷக்கள் பீற்றிக் கொள்வார்கள். அதில் உண்மை இல்லாமல் இல்லை. பிரதான வீதிகளைச் செப்பனிட்டார்கள். ரயில் பாதைகளைச் சீரமைத்தார்கள்.

இத்தகைய பெருஞ்செலவிலான கட்டுமானங்களை ராஜபக்ஷக்கள் விரும்பி முன்னெடுத்தமைக்குக் காரணங்கள் உண்டு.

பாரிய வீதிகள், நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுவதில் இடம்பெறும் – இலகுவில் கண்டு பிடிக்க முடியாத – ஊழல், மோசடிகள் பற்றிய செய்திகள், தகவல்கள் யாவரும் அறிந்தவைதான்.

அடுத்து, வடக்கு – கிழக்கை யுத்தம் மூலம் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த ராஜபக்ஷ நிர்வாகம், அப்பிரதேசங்களில் தனது ஆட்சியதிகாரத்தை உறுதியாக நிலைநிறுத்தவும், நாட்டின் பிற பகுதிகளைச் சேர்ந்த பௌத்த, சிங்கள மக்கள் அங்கு வந்து காலூன்றவும், தமது வர்த்தக நடவடிக்கைகளை அவர்கள் பெருக்கிக் கொள்ளவும் இத்தகைய போக்குவரத்துக் கட்டுமானங்கள் அவசியம் என்றுணர்ந்து, அவற்றில் ஈடுபாடு காட்டி அவற்றை முன்னெடுத்தது.

ரயில் பாதைகளை அமைக்கும் விடயத்தில் இந்திய உதவித் திட்டம் கிடைத்தமையால் அதைப் பயன்படுத்த வேண்டிய தேவையும் கட்டாயமும் கொழும்புக்கு இருந்தது. அதனைப் பயன்படுத்தியது. வடக்குக்கு ஒரு ரயில் பாதை கிடைத்தது.

ஆனால், இவற்றை தாண்டி வடக்கின் – அல்லது வடக்கிற்கான – போக்குவரத்துப் பாதையை அதற்கு மேல் மேம்படுத்துவதில் ராஜபக்ஷக்கள் ஈடுபடவும் இல்லை, அதில் விருப்புக் காட்டவும் இல்லை.

நல்லாட்சி அரசின் காலத்தில் தமிழர் தரப்பினதும் இந்தியாவினதும் அழுத்தங்கள் காரணமாக – பெரும் பின்னடிப்புக்குப் பின்னர் – பலாலி சர்வதேச விமான நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் கோட்டாபய அரசு வந்த பின்னர், பலாலி சர்வதேச விமான நிலையத்துக்கு மூடு விழா நடத்தும் திட்டம், கொவிட் தொற்றுடன் கனகச்சிதமாக அரங்கேறியது.

கொவிட் தொற்றின் பின்னர் நாடு வழமை நிலைக்குத் திரும்பிய போதும், பலாலி சர்வதேச விமான நிலையம் இதுவரை திறக்கப்படவேயில்லை. தலைமன்னார் – இராமேஸ்வரம் மற்றும் காங்கேசன்துறை – காரைக்கால் கடல் போக்குவரத்துக்கு அனுமதியளிக்கப்படவில்லை.

இந்தியா கடும் அழுத்தம் கொடுத்தும் கூட அவை நடக்கவில்லை.

இதேசமயம், இரத்மலானை விமான நிலையம் மட்டும் இன்று சர்வதேச விமானப் போக்குவரத்துக்குத் திறக்கப்படுகின்றது. ஆனால் பலாலி சர்வதேச விமான நிலையத்தைத் திறக்கும் அசுமாத்தம் ஏதும் நடப்பதாகத் தெரியவில்லை.

பலாலி சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டால் சர்வதேச வர்த்தகத்துக்கான மையமாக அது மாறும், வடக்கில் தொழில் வாய்ப்புகள் பெருகும், சுற்றுலாத்துறை அங்கு மேம்படும், இந்தியா – வடக்கு யாழ்ப்பாணம் கூட்டுத் தொழில் முயற்சிகள் மற்றும் வர்த்தகம் பெருகும். அதனால் அதைச் செய்வதற்குக் கொழும்புக்கு விருப்பம் இல்லை. அந்த சர்வதேச விமான நிலையத்தைத் திறக்காமல் அது இழுத்தடிக்கின்றது.

புலம்பெயர் தமிழர்களின் முதலீட்டுக்கு உத்தரவாதமளித்து அவர்களை வரவேற்க இரு கரம் கூப்பிக் காத்திருக்கும் இலங்கை ஜனாதிபதி, அந்த நோக்கத்தைத் தாம் முன்நகர்த்துவதற்கு பலாலி விமான நிலையத்தைத் திறந்தேயாக வேண்டும். செய்வாரா? பார்க்கலாம்.

## ஆர்ப்பாத்தில் ஈடுபடும் வடக்கு மக்களை அரசாங்கம் பக்கச்சார்பாக நடத்துகிறது



### அம்பிகா காட்டம்

தெற்கில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்கள் கையாளப்படும் விதத்துடன் ஒப்பிடுகையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்களை அரசு பக்கச்சார்பான முறையில் நடத்துவதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளரும் சட்டத்தரணியுமான அம்பிகா சற்குணநாதன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்களைக் கட்டுப்படுத்துவதற்கு கேடயங்களை வைத்திருக்கக்கூடிய இராணுவத்தினர், வடக்கில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரைக் கட்டுப்படுத்துவதற்குத் துப்பாக்கிகளை வைத்திருக்கின்றார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையகாலங்களில் பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் பகுதிகளில் ஆயுதமேந்திய இராணுவத்தினர் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கில் பொது இடங்களில் இராணுவத்தினரைக் காணமுடிவதென்பது, குறிப்பாக வடக்கில் ஆழமாகக் கால்பதித்துள்ள இராணுவ மயமாக்கலை புலப்படுத்துகின்றது. அதேவேளை, கொழும்புவாழ் மக்கள் சுதந்திரமாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கப்படுகின்றது. அவர்கள் அரச கட்டடங்களுக்குள் நுழைவதற்குக்கூட முற்படுகின்றார்கள்.

ஆனால், வடக்கில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்கள் வீதிகளிலேயே தடுத்து நிறுத்தப்படுவதுடன் அதற்கு அப்பால் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை என்றும் அவர் விசனம் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக, கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் யாழ்ப்பாண விஜயத்தையொட்டி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் தடுத்துநிறுத்தப்பட்டனர். சம்பவ இடத்தில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட காணொளிகளை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் முன்நோக்கிச் செல்ல முடியாத வகையில் பொலிஸாரால் வீதிகளில் மறிக்கப்பட்டனர்.

பிரதமரைச் சந்திப்பதற்குக் காணாமல் போனோரின் குடும்பத்தினருக்கு அனுமதி மறுக்கப்பட்டமை, அரசு அந்தக் குடும்பங்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்கவில்லை என்பதையும் அந்தக் கோரிக்கைகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதற்கான முனைப்பைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் தெளிவாகப் புலப்படுத்துகின்றது. – என்று சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தெற்கில் வாழும் மக்கள் அவர்களது உரிமைகளை செயற்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகின்ற போதிலும், வடக்கு மக்கள் அவர்களது உரிமைகளை செயற்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இது சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்றும் அனைவரும் சமனாக சட்டப்பாதுகாப்பைப் பெறுவதற்கு உரித்துடையவர்கள் என்றும் வரையறுத்துள்ள அரசமைப்பின் 12(1) ஆவது சரத்தை மீறும் வகையிலான செயற்பாடாகும் என்றும் அவர் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியக் கடற்படைக் கப்பல் கொழும்பை வந்தடைந்தது

இந்திய கடற்படைக்கப்பலான ர்தா, நவீன இலகு ரக ஹெலிகொப்டருடன் 23ஆம் திகதி கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

ரோந்து கப்பலான ர்தாவின் கட்டளை அதிகாரியான தளபதி யதீஷ் பதெளதியா மேற்கு கடற் பிராந்திய தளபதி ரியர் அட்மிரல் ஏ.யு.சி டி சில்வா அவர்களை இந்த விஜயத்தின் போது சந்தித்திருந்தார்.

அத்துடன் கப்பலில் 2022 மார்ச் 24 ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வொன்றில் இந் தியாவின் அயலுறவுக்கு முதலிடம் கொள்கையின் கீழ் இந்திய அரசின் நன்கொடை உதவித்திட்டத்தின்கீழ் இலங்கை கடற்படையின் சாகர கப்பலுக்காக வழங்கப்பட்ட உதிரிப்பாகங்களை ரியர் அட்மிரல் ஏ.யு.சி.டி. சில்வா பிரதி உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் கையளித்திருந்தார். உரிய நேரத்தில் வழங்கப்பட்ட இந்த உதிரிப்பாகங்கள் இலங்கை கடற்படையின் செயற்திறனை உறுதிப்படுத்தும்.



மேலும், சிசெல்ஸ் பாதுகாப்புப் படையினருக்காக இலங்கை கடற்படையால் தயாரிக்கப்பட்ட 10 தொன்கள் நிறையுடைய அலை சவாரி படகொன்றும் இந்தக் கப்பலில் ஏற்றப்பட்டுள்ளதுடன் சிசெல்ஸுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இந்தியகடற்படையின் முயற்சிகள் அனைத்தும் 'நட்புறவுப் பாலங்கள்' என்ற கொள்கையின் அடிப்படையில் அயலில் உள்ள நட்பு நாடுகளுடன் உறவை வலுவாக்குவதை நோக்காகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் பொருளாதார நெருக்கடி மண்டப முகாம் சீரமைப்புப் பணிகள் தீவிரம்

இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக தமிழகத்துக்கு அகதிகளாக வருபவர்களுக்கு, மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்வதற்காக மண்டபம் முகாமில் உள்ள 147 குடியிருப்புகளில் அடிப்படை வசதிகள் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மண்டபம் மறுவாழ்வு முகாம் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி மன்னார், வவுனியா உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 16 பேர் கடந்த 22 ஆம் திகதி அகதிகளாக தனுஷ்கோடி சென்றனர். அவர்கள் மண்டபம் முகாமில் உள்ள தனிமைப்படுத்தப்படும் பகுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளமையோடு ஆயிரக்கணக்கான இலங் கைத் தமிழர்கள், தமிழகம் வரத் தயாராக உள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இதைத் தொடர்ந்து, மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கும் வகையில் மண்டபம் மறுவாழ்வு முகாமில் உள்ள 147 வீடுகளின் மறு சீரமைப்பு செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பணிகளை துரிதப்படுத்த இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு முகாம் தனித் துறை ஆட்சியர் சிவகுமாரி, ராமநாதபுரம் வட்டாச்சியர் ரவிச்சந்திரன், மண்டல துணை வட்டாட்சியர் ரவி, மண்டபம் பேரூராட்சி தலைவர் டி.ராஜா, கிராம நிர்வாக அலுவலர் கண்ணன் உள்ளிட்டோர் கவனம் செலுத்தி வருகின்றனர்.

சபரிமலை
ஸ்ரீ ஐயப்பன் றேடர்ஸ்
Sabarimalai Sri Iyappan Traders
இல.315, கண்டிறோட், கிளிநொச்சி.
No. 315, Kandy Road, Kilinochchi.
Tel:- 021 228 3701,076 307 8091




விசேட நிகழ்வுகளுக்கும், வியாபார நிலையங்களுக்கும் இலவச Delivery - அனைத்துத் தேவைகளுக்கும்
077 986 2476 - 077 983 8091 எனும் இலக்கங்களுக்கு வரும் ஓடர்களுக்கு சலுகை வழங்கப்படும்.
076 307 8091, 021 228 3701, 077 986 2470


# டொலரின் பெறுமதியே பண்டிகைக் காலத்தில் பொருள்களின் பெறுமதியைத் தீர்மானிக்கும்

துறைமுகத்தில் சிக்கியுள்ள கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டால் பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய ஆயிரத்து 500 கொள்கலன்கள் தற்போது துறைமுகத்தில் சிக்கியுள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பண்டிகைக் காலங்களில் டொலரின் பெறுமதியே பொருள்களின் விலையை தீர்மானிக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# எம்.பிக்கள் செலுத்த வேண்டிய நீர்கட்டண நிலுவை 16 கோடி ரூபா!

தற்போதைய மற்றும் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய நீர் கட்டண நிலுவை 16 கோடி ரூபாவை கடந்துள்ளது.

தேசிய நீர் வழுங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் இது தொடர்பாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

குடிதண்ணீர் கட்டணத்தை செலுத்த தவறிய சுமார் 20 அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உயிரிழுந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அமைச்சர்களின் நீர் கட்டணத்தை செலுத்தும் பொறுப்பு அந்தந்த அமைச்சுக்களிடம் இருப்பதால், அதற்கான நிலுவைத் தொகையை சம்பந்தப்பட்ட அமைச்சுக்களிடம் இருந்து வசூலிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தேசிய நீர் வழுங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

# மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை வழங்க ஏற்பாடுகள்


மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான டீசல் பற்றாக்குறையால் நாட்டின் முன்னணி மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாடுகள் செயலிழந்துள்ளன.

மேலும், நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்து வருவதால், மின் உற்பத்தி செய்யும் பணியில் கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை காரணமாக நாடளாவிய ரீதியில் பல மணி நேரங்கள் மின்வெட்டை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.



சொர்க்கம்
திருமண சேவை

இல.102/ A , பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| பிறந்த திகதி - 04.06.1985 மதம் - இந்து<br>ஜாதி - வெள்ளாளர்<br>நட்சத்திரம் - சதயம் 4ம் பாதம்<br>கி.பா - செவ் - 12இல்<br>தகைமை - B.Sc, M.Sc (America)<br>தொழில் - Software Engineer<br>எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த பட்டதாரி மணமகள் | பிறந்த திகதி - 13.12.1993 மதம் - இந்து<br>ஜாதி - வெள்ளாளர் நட்சத்திரம் - கேட்டை<br>கி.பா -<br>செவ் - 12<br>தகைமை - LLB<br>தொழில் -<br>எதிர்பார்ப்பு - அரச உத்தியோக மணமகன் |
| பிறந்த திகதி - 21.10.1990 மதம் - இந்து<br>ஜாதி - வெள்ளாளர் நட்சத்திரம் - அனுசம்<br>கி.பா - செவ் - 4 இல்<br>தகைமை -<br>தொழில் - Restaurant (France)<br>எதிர்பார்ப்பு - யாழ்ப்பாணத்தில் படித்த அழகிய மணமகள் | பிறந்த திகதி - 28.08.1994 மதம் - இந்து<br>ஜாதி - வெள்ளாளர் நட்சத்திரம் - பரணி<br>கி.பா - செவ் - 12 இல்<br>தகைமை - Nursing<br>தொழில் -<br>எதிர்பார்ப்பு - தனியார் உத்தியோக மணமகன் |
| பிறந்த திகதி - 29.08.1993 மதம் - இந்து<br>ஜாதி - வெள்ளாளர் நட்சத்திரம் - உத்திராடம்<br>கி.பா - செவ் - 2 இல்<br>தகைமை - தொழில் - Civil Engineering (Canada)<br>எதிர்பார்ப்பு - இலங்கையில் படித்த பட்டதாரி மணமகள் | பிறந்த திகதி - 27.12.1983 மதம் - இந்து<br>ஜாதி - கோவியர் நட்சத்திரம் - அத்தம்<br>கி.பா - செவ் - 8 இல்<br>தகைமை - BA தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - அரச உத்தியோக மணமகன் |
| பிறந்த திகதி - 1982.11.12 மதம் - இந்து<br>ஜாதி - வெள்ளாளர் நட்சத்திரம் - அஸ்தம்<br>கி.பா - செவ் - 2 இல்<br>தகைமை - Pharmacist<br>எதிர்பார்ப்பு -உள்ளூர் அழகிய படித்த மணமகள் | பிறந்த திகதி -05.10.1988 மதம் - இந்து<br>ஜாதி - வெள்ளாளர் நட்சத்திரம் -சதயம்<br>கி.பா - செவ் - 12இல்<br>தகைமை - A/ level தொழில் - தனியார் நிறுவன ஊழியர்<br>எதிர்பார்ப்பு - அரச, தனியார் உத்தியோக மணமகன் |

077 650 5097, 077 887 6969
தலைமை அலுவலகம் - கனடா - 001415666611855


# மருந்துகள் இறக்குமதி செய்ய 10 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் நோக்கில் 14 முக்கியமான மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு 10 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

முக்கியமான மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக நிதி அமைச்சின் செயலாளரான எஸ்.ஆர்.ஆட்டிகலவுடன் இணைந்து இந்த விடயம் தொடர்பாக மதிப்பீடு செய்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, அடுத்த ஆறு மாதங்களுக்கு 14 முக்கியமான மருந்துகள் இறக்குமதி செய்யப்படும் திட்டத்தை தயாரித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, ஏனைய மருந்துகளுக்கும் முன்னுரிமை கொடுப்பதால், எதிர்காலத்தில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக மருந்துகளை இறக்குமதி செய்வதில் தாமதம் ஏற்பட்டிருந்தமையினையும் அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

75 வீதத்திலிருந்து 80 வீதமான மருந்துகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன, அதேவேளை ஐந்து வீதம் சீனாவிலிருந்தும், மேலும் ஐந்து முதல் 10 வீதம் பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தானிலிருந்தும், ஐரோப்பாவிலிருந்து மிகக் குறைவான அளவில் மருந்துகள் இறக்குமதி செய்யப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# மருத்துவக் கதிர்





# சிறுவர்களுக்கு ஏற்படும் உளவியல் பயமும் காரணங்களும் தீர்வும்

டாக்டர் ஆஷா லெனின்
தமிழ்நாடு - இந்தியா

இன்றைய தலைமுறையினர் பலர் வயது வேறுபாடின்றி, தேவையற்ற பயத்துடனும் அதிகரித்த மன அழுத்தத்துடனும் சிரமப்படுவதை காணமுடிகின்றது.

இத்தனைக்கும் அன்றைய தலைமுறையினருடன் ஒப்பிடும் போது பெரும்பாலும் தற்காலத்தினர் உணவு, இருப்பிடம், கல்வி, தொழில் வாழ்க்கை, நிதி நிலைமை என அனைத்திலும் முன்னேற்ற நிலையில் இருக்கின்றனர்.

இருந்த போதிலும் தேவையற்ற பயம் அதனூடான மனஅழுத்தம், தூக்கமின்மை என நீண்டு செல்கின்ற மன, உடல் ரீதியான நோய்களால் பாதிப்புக்குள்ளாகின்றனர். தேவையற்றது, காரணமற்றது என புத்தி அறிந்திருந்த போதிலும் அதனை ஏற்கத் தயாரில்லாத மனோநிலை அல்லாவிடில் பயந்து பயந்து பழகிய அப்பழக்கம். பயப்படுவதற்கு ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டிருத்தல் தேவையற்ற சிந்தனை என அடுக்கிக்கொண்டே போகலாம்.

இவ்வாறான அதிகரித்த தேவையற்ற பயத்திற்கு என்ன காரணம்? என்ன காரணத்தினால் ஆழ்மனம் இவ்வாறு பயப்படுமாறு தகவமைக்கப்பட்டுள்ளது? என ஆராயும் போது, இத்தகைய பெரும்பாலான பயப் பிரச்சினைகளுக்கு தோற்றுவாய் ஒரு குழந்தை ஜனிக்கும்போதே குறிப்பிட்ட வகையான அச்சங்களுடன் பிறப்பதும் அதன் மழலைப் பருவத்தில் அதற்கு சரியான முறையில் தீர்வு காணப்படாமையுமே ஆகும்.

### சத்தத்தை பற்றிய பயம்

பூமியில் பிறக்கும் குழந்தைகள் அனைத்தும் பிரதானமாக இரண்டு வகையான பயங்களுடன் பூமிக்கு வருகின்றன. அதில் முதலாவது சத்தம் பற்றிய பயம். குழந்தை பூமிக்கு வரும் போது சத்தம் பற்றிய அச்ச உணர்வு அதற்கு இருந்து கொண்டே இருக்கும். அதனைப் போக்கும் விதமாகவே நமது பாரம்பரியத்தில் கருவுற்றிருக்கும் பெண்களுக்கு 5 – 9 மாதமளவில் வளைகாப்பு நிகழ்ச்சி செய்யும் வழக்கம் காணப்படுகின்றது.

பொதுவாககுழந்தைஉருவாகி 18ஆவதுவாரத்திலேயே அதற்கு சத்தங்களை உணரும் திறன் உருவாகும். மேலும் வாரங்கள் செல்லும் போது அதன் கேட்கும் திறன் உயர்வடைந்து கொண்டு செல்லும். எனவே கருவிலிருக்கும் ஒரு குழந்தைக்கு கேட்கும் திறன் உருவாகும் பொழுதில் முதன்முதலாக வளையல் சத்தத்தைக் கேட்டு உணருவது அதன் ஆரோக்கியகரமான வளர்ச்சிக்கு பெருமளவில் பங்களிக்கும்.

ஒரு குழந்தை கருவிலிருக்கும் போதே சத்தங்களை புரிந்து தன் உணர்ச்சிகளால் எதிர்வினையாற்றும் எனவும் தாயின் மனநிலை அதன் மன, உடல் ஆரோக்கியத்திலும் வளர்ச்சியிலும் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தற்போதைய நவீன ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. ஆனால் இவை எல்லாம் எமது பல்லாயிர வருடப் பாரம்பரியக் கலாச்சாரத்தில் அபிமன்யு, பிரகலாதன் கதைகளூடாகக் கூறப்பட்டவையே.

ஆகையினால் தான் கருவுற்ற பெண்கள் அமைதியான மனநிலையுடன் காணப்படுவதுடன் நல்ல இசை, வளையல் சத்தம் போன்ற இனிய சத்தங்களைக் குழந்தைக்கு உணர்த்துவதும் அத்தியாவசியமாகக் காணப்படுகின்றது.

ஆனால் இன்றைய காலத்தில் குழந்தை பிறந்த பின் அதற்கு வழங்கப்படும் ஆதரவும் கவனிப்பும் அது கருவில் இருக்கும் போது வழங்கப்படுவதில்லை என்பதே நிதர்சனமான உண்மை. நல்ல மன மகிழ்வுடனும் ஆரோக்கியத்துடனும் இருக்க வேண்டிய கர்ப்பிணிப் பெண்கள் அதிகரித்த மன அழுத்தங்கள், குடும்ப சண்டை என நிறைய பிரச்சினைகளை எதிர்கொள்கிறார்கள்.

அதிலும் குறிப்பாக திருமணமாகி சில வருடங்களின் பின் கருத் தரிப்பவர்களை விட திருமணமானவுடன் தாய்மை அடைபவர்கள் எதிர்நோக்கும் மனச் சோர்வு ஒப்பீட்டளவில் அதிகமானது. ஏனெனில் அவர்கள் ஒரு புதிய சூழலில் தன்னை முழுமையாக பொருத்திக் கொள்ளும் முன்பே தாயாவதால் உறவுகளை புரிந்து கொள்வதிலும் சகித்துக் கொள்வதிலும் அவர்கள் எதிர்நோக்கும் சிக்கலும் மன உளைச்சலும் அதிகமானது.

எனவே குடும்ப உறுப்பினர்களும் அவற்றைப் புரிந்து நடந்து கொள்ளல் மழலையின் ஆரோக்கியத்தை சீராகப் பேண உதவும். மேலும் குழந்தை பிறந்தவுடன் அது முதன்முதலாக கேட்க வேண்டிய இதமான இசை தாலாட்டு. அந்த இனிய அரவணைப்பான இசை சேய்க்கும் தாய்க்குமிடையிலான பந்தத்தை அதிகரித்து அது உலகத்துடன் ஒத்திசைந்து பயமின்றி வாழ்வதற்கான நற்சூழலை ஏற்படுத்துகின்றது.

### கீழே விழுந்து விடுதல் தொடர்பான அச்சம்

பிறக்கும் போதே குழந்தைகளை பீடிக்கும் இரண்டாவது வகையான பயமாக கீழே விழுந்து விடுதல் தொடர்பான அச்சத்தைக் கூறலாம். பொதுவாகவே மனிதர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் போது கீழே விழுதல் தொடர்பான அச்ச உணர்விற்காட்பட்டு திடுக்கிட்டு விழிப்பு நிலைக்கு வருதலைக் காணலாம்.

அதே போல் குழந்தைகள் உறங்கி கொண்டிருக்கும் போதே திடுக்கிட்டு எழுந்து அழுவதற்கு காரணம் இவ்வகையான அச்சம் தான். குரங்குகள் மரத்திற்கு மரம் தாவிக் கொண்டே இருக்கும். தாவிக் கொண்டிருக்கும் போது கீழே விழுந்து விடுவோமோ என்ற வகையான அச்சம் அவைகளுக்கு காணப்படும். குரங்குகளிலிருந்து பரிணாம வளர்ச்சி அடைந்தவன் மனிதன் என்ற கொள்கையின் பிரகாரம் குரங்குகளிற்கு காணப்பட்ட அந்த ஆழமான அச்சம் குழந்தைகளின் ஆழ்மனதில் இவ்வகையான பயத்தை தோற்றுவித்திருக்கலாம்.

எவ்வாறிருப்பினும் குழந்தைகளை ஏணைகளில் உறங்க வைப்பதனூடாக எம் முன்னோர்கள், குழந்தைகளிலிருந்து இவ் வகையான பயத்தை வென்றெடுத்தனர். ஏணையில் உறங்க வைக்கப்படும் குழந்தைகள் தன்னைச் சுற்றிய ஒரு பாதுகாப்பை எப்போதும் எந்நேரமும் உணர்வார்கள். ஏனெனில் ஏணை கட்டப் பயன்படும் புடைவை, தாயினதோ பாட்டியினதோ பழைய பருத்திப் புடைவையாகவே இருப்பதால் அவர்களின் ஸ்பரிசத்தையும் பாதுகாப்பையும் எந்நேரமும் உணர முடியும். அத்துடன் தொட்டிலுடன் ஒப்பிடுகையில் ஏணை எந்நேரமும் குழந்தையை ஸ்பரிசித்தபடி இருப்பதாலும் அதன் தாய் பாட்டி ஆகியோரின் ஸ்பரிசப் பாதுகாப்பை ஆன்மரீதியாக உணர முடிவதாலும் குழந்தை இத்தகைய மனப் பயம் விடுத்து நிம்மதியாக இருக்கும்.



### தாயைப் பிரிவதற்கான பயம்

இவ்வகையான பயம் குழந்தை வளர்ந்து வரும் பருவத்தில் அது முகங்களை இனங்காணத் தொடங்கிய பின் ஏற்படுவது. இப் பருவத்தில் குழந்தை முகங்களை இனங்கண்ட பிற்பாடு அது புதிய மனிதர்களை எண்ணிப்பயம் கொள்வதோடு தாயின் பிரிவையும் அருகின்மையையும் நினைத்து ஏங்கி அச்சமுறும். இது பற்றிய பல புத்தகங்கள், தீர்வுகள் என மேலைத்தேய ஆராய்ச்சிகள் விரிவடைந்து வருகிற போதும் நாம் குழந்தைகளுடன் விளையாடுவது போல இதற்கான தீர்வுகளைக் எம்மையறியாமலேயே கைக்கொண்டு வருகிறோம். உதாரணமாக குழந்தையின் முன் சென்று அம்மா முகத்தை மூடி பின் திறந்து விளையாட்டுக் காட்டல் பிள்ளையின் முகத்தை மூடி பின் திறந்து விளையாடி மகிழல், ஒழித்துப் பிடித்து விளையாடல் ஆகியன ஒரு சாதாரண விளையாட்டு நிகழ்வாக தோன்றினாலும் குழந்தை தாயைப் பிரிந்து மீண்டும் இணையும் சூழலுக்குத் தன்னைத் மனதளவில் தயார்படுத்திக் கொள்ளும். தன் பெற்றோர்,தனக்குப் பரிச்சயமானவர்கள் தன்னை விட்டு தற்காலிகமாக நீங்கிய போதிலும் மீண்டும் தன்னுடன் இணைவார்கள் என தன்னை மனதளவில் அச் சூழலுக்கு தயார் செய்து தாயைப் பிரிவதற்கான பயத்தைக் கடந்து வரும்.

இவ்வாறாக குழந்தையின் மூன்று வயதுக்குள் அதை அச்சப்படுத்தும் பயங்களிற்கு முறையாக வழங்கப்படும் அரவணைப்பு அதன் வாழ்நாள் முழுவதுமான சிறந்த நல் மனோ ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கும். ஆனால் சிறுவயதில் இவ்வாறான முறையற்ற அச்சத்திலிருந்து விடுதலையடையாத குழந்தைகளே பின்நாளில் அளவுக்கதிகமான சிந்தனை, பயம், பதற்றம், அதிகரித்த மன அழுத்தம் எனப் பல வகையான உளவியல் நெருக்கடிகளுக்கு உள்ளாகுகிறார்கள்.

மேலும் இவை மட்டும் தான் குழந்தைகளுக்கு ஏற்படும் பயங்களா? எனின் நிச்சயமாக இல்லை. இவை தவிர அவர்கள் வளர்ந்து வரும் சூழலில் சந்திக்கும் பலவகைப்பட்ட போபியாக்கள். தனிமை, இருட்டு, உயரம் என பல வகைப் பட்ட அச்சங்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும். எடுத்துக்காட்டாக இரண்டரை வயதுள்ள ஒரு குழந்தையின் மீது ஒரு நாய் தாவிப் பாய்ந்ததன் பின்னர் அந்தக் குழந்தைக்கு திக்கு வாய் ஏற்பட்ட சம்பவத்தைக் கூறலாம். திக்குவாய்ப் பிரச்சினை பரம்பரையாக மட்டும் ஏற்படுவதில்லை. 2 – 5 வயது வரையான குழந்தைக்குகளுக்கு அவை சந்திக்கும் மிகப் பெரிய அதிர்ச்சியின் காரணமாகக் கூட திக்குவாய் ஏற்படலாம். இந்த வயதுப் பிரிவிலுள்ள குழந்தைகள் திக்கிப் பேசத் தொடங்கியவுடனேயே உரிய கவனிப்பை மேற்கொண்டு ஆயுர்வேத மருத்துவ முறைகளை நாடும் போது ஒன்றிரண்டு மாதங்களிலேயே அவை முற்றிலும் குணமாகும். ஆனால் இப்பிரச்சினை ஆறேழு வயதிற்குப் பிறகு ஏற்பட்டால் ஆறு மாத கால பொறுமையான சிகிச்சையைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக அவை நிச்சயம் சீரடையும். எனவே குழந்தைகளுக்கு இயற்கையாக ஏற்படும் பயங்களைப் போக்குவதோடு மேலும் அவர்களை அதட்டி மிரட்டித் திகிலுறாத வண்ணம் வளர்க்க வேண்டியது பெற்றோரின் முக்கியமான கடமை ஆகும்.

# RADIANT DAWN

**A Sunday Supplement in English to Kalaikkathir**

**Page I** English for all **Sunday the 27th of March 2022**

**We welcome students' articles in word for publication**

-Editor-

kalaikkathiredu@gmail.com


## PASSIVE VOICE : SIMPLE PRESENT TENSE WORKSHEET


**Rewrite each sentence using passive voice for simple present tense.**



**1.** People produce cars in this factory.

..................................

..................................



**2.** The farmer grows carrots in his field.

..................................

..................................



**3.** Mrs.Lawrance milks her cow twice a day.

..................................

..................................



**4.** Alexander plays golf every Sunday morning.

..................................


..................................



**5.** Maisie takes a lot of nature photos at weekends.

..................................

..................................



**6.** Everyone in this class loves and respects Diana.

..................................


..................................



**7.** Mason and Lucas read story books every day.

..................................


..................................



**8.** Lexi and Megan eat ice-cream three times a week.

..................................

..................................



**9.** The Hamiltons cook roast turkey on special days.

..................................

..................................



**10.** Mr.Oven cleans our street every morning.

..................................

..................................



**11.** A mechanic repairs your car in his garage.

..................................

..................................



**12.** Mr.Ward sells fresh meat in his shop.

..................................

..................................

### ANSWERS

1. Cars **are produced** in this factory.
2. Carrots **are grown** in his field.
3. Her cow **is milked** twice a day.
4. Golf **is played** every Sunday morning.
5. A lot of nature photos **are taken** at weekends.
6. Diana **is loved** and respected.
7. Story books **are read** every day.
8. Ice-cream **is eaten** three times a week.
9. Roast turkey **is cooked** on special days.
10. Our street **is cleaned** every morning.
11. Your car **is repaired** in his garage.
12. Fresh meat **is sold** in his shop.

**I have no special talent. I am only passionately curious - Albert Einstein**

# Queen Elizabeth II - Biography



She is the longest-serving British monarch and has presided over half a century of continual change both within the Royal Family, Great Britain and the Commonwealth.

Elizabeth was the eldest child of Prince Albert, the Duke of York (later George VI) and his wife Elizabeth (later known as the Queen Mother). Her father Prince Albert was second in line to the throne until his elder brother Edward VIII abdicated in 1936 – pushing the shy Prince Albert into an unexpected role of King. King George VI rose to the challenge though he died early in 1952.

Elizabeth was educated at home, along with her sister Princess Margaret. During the Second World War, they were evacuated to Balmoral and later Windsor Castle. Towards the end of the war in 1945, Elizabeth joined the Women's Royal Auxiliary Territorial Service, where she served as a driver and mechanic. After the war, she increasingly stepped into her role of performing public service and made her first overseas trip to South Africa in 1947. Shortly before her 21st birthday, she said:

***"I declare before you all that my whole life, whether it be long or short, shall be devoted to your service and the service of our great imperial family to which we all belong."***

In 1947, she married Prince Philip of Greece and Denmark in a ceremony at Westminster; they had known each other for several years. Some were opposed to the union because of his foreign ties, but this was overcome by his service in the Royal Navy. They have been happily married for over 70 years, and their relationship is a source of mutual strength, even if Prince Philip has a reputation for letting slip the odd colourful remark about foreigners. Elizabeth gave birth to their first child in 1948 – the future Prince Charles. They had four children in total. (Charles, Anne, Andrew, Edward)

In 1952, her father George VI passed away and Queen Elizabeth was crowned Queen with widespread enthusiasm. Her coronation set TV records around the globe, and it appeared to usher in a new era for the monarchy and British Commonwealth. News of Edmund Hilary reaching the peak of Mt Everest was delayed to coincide with her coronation. It appeared a symbolic end to the post-war austerity.

The 1950s could be seen as the golden age for the Queen. Deference and respect to the Royal family were still high, and the young Elizabeth looked like the fairy-tale Princess. However, over the next few decades, widespread social change saw a decline in traditional attitudes to the monarchy. Also, the new era of TV and intense media scrutiny led to many unfavourable headlines as her children were caught up in marital problems and related scandals.

Yet, there were still high points for the Royal Family, such as her 'Silver Jubilee' in 1977 and the wedding of Prince Charles and Lady Diana in 1981. By the 1990s, the media had a widespread fascination with Princess Diana, but as their marriage broke down, the Queen was increasingly perceived as being out of touch. In 1992, she famously declared the year to be her 'annus horribilus' The year saw media headlines dominated by the marriage breakup of Charles and Diana, a fire in Windsor, and other criticisms of the Royal Family.

***G.C.E O/L Literature - Short Story***

# *The Lumber Room -Themes*

## Mischief

Mischief is the dominant theme in "The Lumber Room." From the beginning to the end of the story, Saki delights the reader with Nicholas's persistent playful misbehavior. In the opening scene, the narrator details how Nicholas complains of a frog in his breakfast bowl, only to reveal that he put it there himself. His antics land him in trouble with his authoritarian aunt, but Nicholas's bottomless capacity for mischief means he uses the punishment of having to stay home to his advantage. While the other kids go to the beach and his aunt stands watch at the entrance to the gooseberry garden, believing Nicholas will try to sneak in, Nicholas is free to act on his long-awaited plan: entering the lumber room. Having satisfied his curiosity, Nicholas goes back to the garden when his aunt calls his name. She is stuck in the rain-water tank and needs his help to get out, but Nicholas can't pass up the opportunity for further mischief. Instead of getting the ladder, he reminds her that he is forbidden from going into the gooseberry garden. He then pretends he believes she isn't his aunt, but rather the Devil trying to tempt him to misbehave. Ultimately, Nicholas's penchant for mischief makes the boredom of living under his aunt's rigid control bearable.

## Imagination

Imagination is another of the story's major themes. Alongside mischief, Nicholas shows a great capacity for imagination. Although Nicholas uses his imagination in order to devise plans to carry out mischief, the theme comes up even more explicitly when Nicholas enters the lumber room. Long prevented from seeing the treasures that lie within, Nicholas imagines the otherworldly potential of the restricted room, which "[comes] up to his expectations." Inside, he finds a fire-screen tapestry that depicts a scene frozen in time. A bow huntsman and his dogs stand before a dying deer, and Nicholas imagines what will happen if the huntsman does not notice the wolves stalking toward him from the woods. He also finds a book of bird illustrations. When he hears his aunt shrieking his name, Nicholas is busy "assigning a life history" to a mandarin duck.

Nicholas also uses his imagination once he is outside and tasked with helping his aunt escape the rain-water tank. Thinking quickly, he invents an excuse not to help or trust her, pretending she is the Devil. At the end of the story, when everyone sits in miserable silence at the tea table, Nicholas continues to use his imagination to his benefit, thinking back to the tapestry scene and imagining alternative outcomes for the huntsman and his dogs.

## Authority

In contrast to Nicholas's playful mischievousness and imagination is his aunt's oppressive imposition of authority. The theme of authority arises in the story's first sentences, when Saki sets up the premise: "The children were to be driven, as a special treat, to the sands at Jagborough. Nicholas was not to be of the party; he was in disgrace." The narrator's passive voice obscures the role the aunt plays in the punishment, but the narrator later explains how it is the aunt's decision to keep Nicholas home; in fact, she invented the occasion of the beach trip explicitly to punish Nicholas for putting a frog in his breakfast bowl. The aunt continues to flex her authority over Nicholas, barring him from the gooseberry garden while he is grounded. In a passage that reveals how strongly she believes in her authority, the aunt says, "It's no use trying to hide there; I can see you all the time," although both the reader and Nicholas know how wrong she is. The aunt's oppressive authority eventually comes back to haunt her when she needs Nicholas's help to escape the rain-water tank. Having cultivated a hostile power dynamic with the boy, the aunt discovers that when the




tables are turned and she is at Nicholas's mercy, he is especially unlikely to obey her command.

## Defiance

Defiance is another of the major themes in "The Lumber Room." Expressed predominantly through Nicholas's reactions to his aunt, defiance first arises as a theme when the aunt tries to impose restrictions on Nicholas's freedom. Hoping Nicholas will cry because he has been left out of the beach trip, the aunt is dismayed to see that Nicholas defies her expectations by chuckling at the sound of his cousin crying in the carriage. Defiance comes up again when the aunt disallows Nicholas from going into the gooseberry garden. Nicholas has an obstinate expression that makes the aunt certain he will try to defy her command, and Nicholas proceeds to exploit her expectation of defiance by pretending to try to get into the garden. With his aunt distracted, Nicholas is able to safely enter the restricted lumber room and enjoy its treasures. As a final act of defiance, Nicholas refuses to help his aunt when she gets stuck in the rain-water tank. In an instance of situational irony, he refuses to fetch a ladder on the grounds that he must obey his aunt's initial command to stay out of the gooseberry garden, effectively defying her through obedience.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# நன்றி மறந்த சிங்கம்



முல்லை மலர் என்ற காட்டில் விறகு வெட்டுவதற்காக சென்று கொண்டிருந்தான் மனிதன் ஒருவன். அப்போது காட்டில் எங்கிருந்தோ சிங்கத்தின் கர்ஜினை கேட்டது. பயத்துடன் ஓடத் தொடங்கினான் அவன்.

"மனிதனே பயப்படாதே! இங்கே வா! நான் உன்னை ஒன்றும் செய்ய மாட்டேன்" என்ற குரல் கேட்டது.

தயக்கத்துடன் குரல் வந்த திசையை நோக்கிச் சென்றான் அவன்.

அங்கு ஒரு கூண்டில் சிங்கம் அடைப்பட்டு இருந்தது. வேட்டைக்காரர்கள் சிலர் சிங்கத்தை உயிருடன் பிடிப்பதற்காக ஒரு கூண்டு செய்து அதற்குள் ஓர் ஆட்டை விட்டு வைத்திருந்தனர். ஆட்டிற்கு ஆசைப்பட்ட சிங்கம் கூண்டிற்குள் மாட்டிக் கொண்டது.

"மனிதனைப் பார்த்த சிங்கம், மனிதனே, என்னை இந்தக் கூண்டிலிருந்து விடுவித்து விடு... நான் உனக்குப் பல உதவிகளைச் செய்வேன்," என்றது.

"நீயோ மனிதர்களைக் கொன்று தின்பவன். உன்னை எப்படி நான் விடுவிக்க முடியும்?" என்றான் மனிதன்.

"மனிதர்களைக் கொல்லும் சுபாவம் எங்களுக்கு உண்டு தான். அதற்காக உயிர்காக்கும் உன்னைக் கூடவா அடித்துக் கொன்றுவிடுவேன். அவ்வளவு நன்றியில்லாதவனா நான்? பயப்படாமல் கூண்டின் கதவைத்திற. உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்" என்று நைசாகப் பேசியது சிங்கம்.

சிங்கத்தின் வார்த்தையை உண்மையென்று நம்பிவிட்டான் மனிதன். கூண்டின் கதவைத் திறந்தான். அவ்வளவுதான்! நன்றி கெட்ட சிங்கம் மனிதன் மேல் பாய்வதற்கு தயாராயிற்று.

இதனைக் கண்ட மனிதன், சிங்கமே, நீ செய்வது உனக்கே நியாயமா? உன் பேச்சை நம்பி உன்னைக் கூண்டி லிருந்து விடுவித்தேனே... அதற்கு இதுதானா நீ காட்டும் நன்றி" என்றான்.

"என் உயிரைக் காத்துக் கொள்வதற்காக நான் ஆயிரம் பொய் சொல்லுவேன். அதை நீ எவ்வாறு நம்பலாம்? மனிதர்கள் என்றால் பகுத்தறிவுள்ளவர்கள் என்று தானே பொருள். அந்த அறிவைக் கொண்டு இது நல்லது, இது கெட்டது என்று பகுதித்தறிய வேண்டாமா? முட்டாள்தனமான உன் செய்கைக்கு நான் எப்படிப் பொறுப்பாக முடியும்?" என்றது சிங்கம்.

கடவுள் உன்னை தண்டிப்பார். உன் உயிரை காப்பாற்றிய என்னையே சாப்பிடுவது நியாயமா? உன்னை விடுவித்ததற்கு இம்மாதிரி நடந்து கொள்வது முறையல்ல" என்றான் மனிதன்.

அப்போது அவ்வழியாக ஒரு நரி வந்தது.

இதனிடம் நியாயம் கேட்போம்" என்று கூறிய மனிதன் நடந்த கதையனைத்தையும் நரியிடம் கூறினான்.

"எங்கள் தொழில் அனைவரையும் அடித்துக் கொன்று சாப்பிடுவதுதான். இது இவனுக்கு நன்றாகத் தெரிந்திருந்தும் கூட என்னைக் கூண்டிலிருந்து விடுவித்தான். முட்டாள்தனமான இந்தச் செய்கைக்கு உரிய பலனை இவன் அனுபவித்தே தீர வேண்டும். நீ என்ன சொல்ற நரியாரே..." என்றது.

அனைத்தையும் கேட்ட நரிக்கு சிங்கத்தின் நன்றி கெட்ட செயல் புரிந்து விட்டது. உதவி செய்த மனிதனைக் காப்பற்றி சிங்கத்தை கூட்டில் பூட்டிவிட தந்திரமாக செயல்பட்டது. அதனால் ஒன்றும் புரியாததைப் போல் பாவனை செய்தது.

"நீங்கள் இந்த மாதிரி சொன்னால் எனக்கு ஒன்றுமே புரியல. ஆரம்பத்திலிருந்து சொல்லுங்கள்" என்றது நரி.

உடனே சிங்கம் சொல்லத் தொடங்கியது.

"நான் அந்தக் கூண்டிற்குள் அடைந்து கிடந்தேன்..."

"எந்தக் கூண்டிற்குள்?" என்றது நரி.

"அதோ இருக்கிறதே அந்தக் கூண்டிற்குள்" என்றது சிங்கம்.

"எப்படி அடைந்து கிடந்தீர்கள்?" என்றது நரி.

சிங்கம் விடுவிடுவென்று கூண்டிற்குள் சென்றது. இதுதான் சமயம் என்று கருதிய நரி சட்டென்று கூண்டுக் கதவை இழுத்து மூடியது.

"நரியாரே! இது என்ன அயோக்கியத்தனம்! நியாயம் கூறுவதாகக் கூறி என்னை மறுபடியும் கூண்டில் அடைத்து விட்டீரே!" என்று கத்தியது சிங்கம்.

"நீங்கள் பேசாமல் கூண்டிற்குள்ளேயே இருங்கள். நான் ஒன்றும் இந்த மனிதனைப் போல் முட்டாள் அல்ல. உங்களுக்குச் சாதகமாக நியாயம் சொன்னால் முதலில் மனிதனை அடித்துக் கொல்வீர்கள். பிறகு என்னையே அடித்துக் கொன்று விடுவீர்கள். அதனால் தான் உங்களைக் கூண்டிற்குள் செல்லுமாறு செய்து கதவைப் பூட்டி விட்டேன்" என்றது நரி.

நன்றி மறந்த சிங்கம் தான் செய்த தவறை எண்ணி வருந்தியது.

**நீதி: ஒருவர் செய்த உதவியை எப்போதும் மறக்ககூடாது.**

# விடுகதைகள்

01. பேப்பர் கிடையாது வாய்ப்பாடு தெரியாது கணக்கிலோ புலி அது என்ன?
கல்குலேட்டர்
02. நாக்கு இல்லாவிட்டால் இவனுக்கு வேலையில்லை அவன் யார்?
மணி
03. அண்டாவில் இருக்கும் தண்ணி அள்ளினாலும் குறையாது அது என்ன?
கிணற்று நீர்
04. வாலுள்ளவன் ஆனால் பறப்பான் அவன் யார்?
காற்றாடி
05. கல்லிலும் முள்ளிலும் பாதுகாப்பான் தண்ணீரில் தவறிவிடுவான் அது என்ன?
செருப்பு
06. பருத்த வயிற்றுக்காரி படுத்தேக் கிடப்பால் அவள் யார்?
தலையணை
07. வயிறு இருக்கும் சாப்பிடாது காது உண்டு கேட்காது அது என்ன?
துணிப்பை
08. அடர்ந்த காட்டில் ஒற்றையடி பாதை அது என்ன?
தலைவகிடு
09. பூவுக்குள் பூ வைத்து போர்த்திய பூ அது என்ன?
வாழைப்பூ
10. முதுகை தொட்டால் மூச்சு விடுவான் பல்லைத் தொட்டால் பாட்டு பாடுவான் அவன் யார்?
ஆர்மோனியம்



# பழமொழிகள்

01. தன்வினை தன்னைச்சுடும், ஓட்டப்பம் வீட்டைச்சுடும்.
02. சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி.
03. மாமியார் உடைத்தால் மண் குடம் மருமகள் உடைத்தால் பொன் குடம்.
04. விண் பொய்த்தால் மண் பொய்க்கும்.
05. குப்பையில் கிடந்தாலும் குண்டுமணி மங்காது
06. ஆலும் வேலும் பல்லுக்குறுதி. நாலும் ரெண்டும் சொல்லுக்குறுதி
07. எண்ணிச் செய்கிறவன் செட்டி, எண்ணாமல் செய்கிறவன் மட்டி.
08. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
09. குந்தித் தின்றால் குன்றும் மாளும்.



# உயரப் பறந்திடுவோம்

**சிறகை விரித்துப் பறந்திடுவோம்
உலகில் அன்பைக் காண
சிறகை விரித்துப் பறந்திடுவோம்
சின்னக் குழந்தைகளே
பொங்கும் மகிழ்ச்சி எங்கும் காண
சிறகை விரித்துப் பறந்திடுவோம்
சின்னக் குழந்தைகளே
நட்பெனும் மலையின் சிகரத்தைக் காண
சிறகை விரித்துப் பறந்திடுவோம்
சின்னக் குழந்தைகளே
உற்றம் சுற்றம் மகிழ்வுடன் வாழ
சிறகை விரித்துப் பறந்திடுவோம்
சின்னக் குழந்தைகளே
நாம் வாழும் வீடு அமைதியாய் இருக்க
சிறகை விரித்துப் பறந்திடுவோம்
சின்னக் குழந்தைகளே
அன்பெனும் நம் எண்ணம் சிறப்பாய் இருக்க
உயர உயர பறந்திடுவோம்
சின்னக் குழந்தைகளே**



# பருவத்தே பயிர் செய்!

வண்ண வான வில்லைப் பார்
எண்ணி ஏழு நிறங்களுண்டு
பார்த்தி ருக்க அதுமறையும் – எங்கள்
பருவம் கூட அதுபோலே

பொழுதை வீணாய் நாம்கழித்தால்
விரைந்து மறையும் காலங்கள்
உணர்ந்து நாங்கள் செயற்பட்டால்
உயர்வு எம்மை நாடி வரும்

பருவத்தி னிலே பயிர்செய்தால்
பலனை நிறைவாய் பெற்றிடலாம்
கல்வி பயிலும் வயதினிலே
கற்றால் அறிவு மேலோங்கும்

சின்னஞ் சிறிய பருவத்தை
சிறப்பாய் பேணி வளர்ந்தவரே
பென்னம் பெரிய அறிஞர்களாய்
பெயரும் பெற்றார் பூமியிலே

**ஷெல்லிதாசன்
திருகோணமலை.**





# பொலன்னறுவையின் சில வரலாற்று சின்னங்கள்



பொலன்னறுவை இலங்கையின் வடமத்திய மாகாணத்திலுள்ள ஒரு புராதன நகரமாகும். கி.பி. 10ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 13 நூற்றாண்டு வரை பண்டைய இலங்கையின் தலைநகரமாக இது திகழ்ந்திருக்கின்றது. அனுராதபுர இராசதானி காலங்களின் போதும் அனுராதபுரத்திற்கு பாதுகாப்பு வழங்கும் அரணாகவும் இந்நகரம் இருந்துள்ளது.

அனுராதபுர இராசதானியை சோழர்கள் கைப்பற்றிய பின்னர், இந்நகரை இலங்கையின் தலைநகராக தெரிவுசெய்தனர். பொலன்னறுவை சோழர்களால் ஜனநாதபுரம் என்று அழைக்கப்பட்டது. சோழர்கள் 52 ஆண்டுகள் இங்கு ஆட்சி செய்தார்கள். சோழர்களை தோற்கடித்த முதலாம் விஜயபாகு தான் பொலன்னறுவையின் முதலாவது சிங்கள மன்னனாவான். பின்னர் இந்நகரம் சிங்கள மன்னர் காலங்களிலும் இலங்கையின் தலைநகரமாக விளங்கியது.

பண்டைய இலங்கையின் இராசரட்டையையும் உருஹுணுரட்டையையும் இணைக்கும் பிரதான வீதி பொலன்னறுவை ஊடாக அமைந்திருந்தமை ஆக்கிரமிப்பாளர்கள் பொலன்னறுவையை தலைநகராக தெரிவு செய்ய முதன்மை காரணமாகும். அரண்மனைகள், மாளிகைகள், கோவில்கள், பௌத்த பிக்குகளுக்கான வசிப்பிடங்கள், மருத்துவமனைகள், பயணிகள் தங்குமிடங்கள், மற்றும் அலங்காரத் தடாகங்கள் என்பன 19 ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் தொல்பொருலியல் ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டன. மற்றும் சோழர்களின் ஆட்சியின் போது இந்து மதம் வளர்ச்சியடைந்து இருந்ததற்கான சான்றாக இப்பகுதியில் சிவன் கோவில்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

**பொலன்னறுவையிலுள்ள வானவன் மாதேவி ஈச்சரம்**

பொலன்னறுவை நகரில் இருந்து வடக்கே 2 கிலோ மீற்றர் தொலைவில் பராக்கிரம சமுத்திரத்தை அண்டி அமைந்துள்ளது வானவன் மாதேவி ஈச்சரம். 10ஆம் நூற்றாண்டின் இறுதித் தொடக்கம், 1070 ஆம் ஆண்டு வரை, இந்த நகரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த சோழர்கள் அமைத்த கோயில்களுள், முழுமையாக இன்றுவரை எஞ்சியுள்ளது இவ் ஆலயம் மட்டும் தான். இக்கோயிலில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாம் இராஜேந்திர சோழனின் ஆரம்பகாலக் கல்வெட்டுச் சான்றைக் கொண்டு இக்கோயில் 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தது எனக் கருதப்படுகின்றது.

ஆரம்ப காலங்களில் வட்டதாகேவின் வெளிப்புறத்தில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள் இந்தியக் கலை அம்சங்களின் செல்வாக்கு நிறைந்து காணப்பட்ட போதிலும் இவ் வட்டதாகே சிற்பங்கள் பண்டைய இலங்கையின் கட்டடக்கலைக்கு உரிய தனித்துவமான அமைப்பை கொண்டுள்ளன. புத்தரின் புனித சின்னங்களை கொண்டு



அமையப்பெற்ற தாதுகோபங்களைப் பாதுகாப்பதற்காக தான் இவ் வட்டதாகேக்கள் ஆரம்பகாலத்தில் கட்டப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன.

நின்ற நிலை மற்றும் அமர்த்த நிலையில் செதுக்கப்பட்டுள்ள பொலன்னறுவை கல் விகாரை புத்தர் சிலைகள்

முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்ட கல்விகாரை, பாறையின் அமைப்புக்கு ஏற்ப முக்கோணப் பகுதியில் அமர்ந்த நிலை புத்தர் சிலையும், உயர்ந்தபகுதியில் நின்ற நிலை புத்தர்சிலையும், நீளமான தட்டையான பகுதியில் சயன நிலை புத்தர் சிலையும் உருவாக்கப்பட்டுள்ளன. இது மகாஞான பௌத்த எண்ணக்கருக்களுக்கு அமைவாகவே செதுக்கப்பட்டுள்ளது.

**இரண் கொத் விகாரை**



இவ்விகாரையானது பொலன்னறுவையில் உள்ள நிசங்கமல்லனால் கட்டப்பட்ட விகாரைகளில் ஒன்றாகும். அனுராதபுரத்தில் உள்ள ருவான்வெலிசாய விகாரையின் கட்டுமானத்தை ஒத்த ஒன்றாக இருக்கின்றது. 550 அடி விட்டமும், 108 அடி உயரமும் கொண்டு முற்றிலும் செங்கற்கள் கொண்டு அமைந்த விகாரையாகும்.

**பொலன்னறுவை ஏழடுக்கு சத்மல் பிரஸாதய கட்டடம்**

அநுராதபுர காலத்தின் போது பொலன்னறுவை புகழ் வாய்ந்த நகரமாகக் காணப்பட்டது. ஐந்தாம் மகிந்தன் அனுராதபுர இராசதானியை ஆட்சி செய்த போது இராஜேந்திர சோழன் என்ற சோழ மன்னனால் இராசரட்டை கைப்பற்றப்பட்டது, பின் அப்பகுதி சோழப்பேரரசின் பகுதியாகியதுடன் அது 'மும்முடிச் சோழ மண்டலம்' எனப்பெயரிடப்பட்டது.

பொலன்னறுவையை, தமிழர்களான சோழர்கள் தலைநகராக்கி ஆட்சி செய்தமையுடன், சிவ வழிபாடு மற் றும் தங்கள் கலைகளில் திராவிட கட்டடக்கலைப் பாணி யையும் பயன்படுத்தியுள்ளமையை அங்குள்ள பண்டைய கட்டிடங்கள் சான்றாக உறுதியளிக்கின்றன.



UNESCO உலக பாரம்பரியக் குழுவினால் நிர்வகிக்கப்படும் அனைத்துலக உலக பாரம்பரியங்கள் திட்டத்தின் பட்டியலில், பொலன்னறுவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன சிறப்பம்சமாகும். இவ்வாறு நம்மை சூழ கொட்டிக்கிடக்கும் நம் முன்னோர்களின் வரலாற்று பொக்கிஷங்களை பேணிப் பாதுகாக்க வேண்யடிது நம் ஒவ்வொரு வரின் கடமையும் ஆகும்.

# கல்விக்கதிர்



- அகரன் -



## சிறுத்தை

சிறுத்தை பூனைப் பேரினத்தின் உறுப்பினரும் பெரியபூனைக் குடும்பத்தைச் சேர்ந்த நான்கு இனங்களில் மிகவும் சிறிய இனமும் ஆகும். ஏனையவை சிங்கம், புலி, ஜாகுவார் என்பனவாகும்.

பெரியபூனைக் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களுடன் ஒப்பிடுகையில் சிறுத்தை ஒப்பீட்டளவில் சிறிய கால்களையும், பெரிய மண்டையோட்டுடன் கூடிய நீண்ட உடலையும் கொண்டிருக்கும். சிறுத்தைகள் ஒரு காலத்தில் சைபீரியா முதல் தென்னாபிரிக்கா வரையுள்ள கிழக்கு மற்றும் தெற்கு ஆசியா மற்றும் ஆபிரிக்கப் பகுதிகளில் பரந்திருந்தன.

உலகின் 7,000 சிறுத்தைகளில் பெரும்பாலானவை இப்போது தென்னாப்பிரிக்கா, போட்ஸ்வானாவில் காணப்படுகின்றன. 60% சிறுத்தைகள் வாழும் தென்னாப்பிரிக்காவில், பாலைவனங்கள், மணல் காடுகள், புல்வெளிகள், வனப்பகுதிகள் மற்றும் மலைகள் ஆகியவற்றில் சிறுத்தைகள் வாசம் செய்கின்றன. மிக முக்கியமாக, இவை மற்ற வேட்டையாடும் விலங்குகளால் குறி வைக்கப்படுகின்றன. இரைக்கான போட்டி தான் இதற்குக் காரணம். இவற்றின் குட்டிகளையும் கூட சிங்கம் போன்ற மற்ற பெரிய விலங்குகள் கவந்து சென்று விடுகின்றன. சிறுத்தைகளுக்கு பெரிய பரப்புகள் தேவை. 5,000 – 10,000 சதுர km வரை உள்ள இடங்கள் தான் சிறந்தவை .

தற்போது வேட்டையாடுதல், வாழ்விட இழப்பு போன்ற காரணங்களால் அவற்றின் பரம்பல் விரைவாகக் குறைவடைந்துள்ளது. இவை தற்போது உப சகார ஆபிரிக்கப் பகுதிகளிலேயே பிரதானமாகக் காணப்படுகின்றன. மேலும் இந்தோனேஷியா, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, இந்தோசீனா, மலேசியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் சிறியளவில் காணப்படுகின்றன. இவற்றின் பரம்பல் மற்றும் தொகை வீழ்ச்சியடைந்து வருவதன் காரணமாக பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தினால் அச்சுறு நிலையை அண்மித்த இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

சூழலுக்குத் தக்கதான வேட்டையாடும் தன்மை, வாழ்விடத்துக்குத் தக்கபடி இசைவாகும் தன்மை, தனது உணவைத் தேடி, மணிக்கு 70 மைல் (112 km) வேகத்தில் ஓடக்கூடிய தன்மை, பாரமான இரையையும் தூக்கிக் கொண்டு மரங்களில் ஏறும் ஆற்றல், மற்றும் மறைந்து வாழும் தன்மை போன்ற பல்வேறு காரணிகள் மூலம் காடுகளில் தப்பி வாழக் கூடியதாக உள்ளன. சிறுத்தை தான் வேட்டையாடும் எந்தவொரு மிருகத்தையும் உணவாகக் கொள்ளும். இதன் வாழ்விடங்கள் மழைக்காடுகளில் இருந்து பாலைவனப் பகுதிகள் வரை வேறுபடுகின்றது. பூனை வகையைச் சேர்ந்த இந்த விலங்கு, பதுங்கிப் பாய்ந்து உணவை வேட்டையாடும் பழக்கமுடையது.



## சிவனொளிபாத மலை

சிவனொளிபாதமலை சப்ரகமுவா, மத்திய மாகாணங்களுக்கிடையிலான எல்லையில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 2,243 மீற்றர் உயரமானமலையாகும். ஆடம்ஸ் சிகரத்தின் உச்சிக்கு அரு கிலுள்ள 1.8 மீற்றர் பாறை அமைப்பாகும். ஆடம்ஸ் சிகரம் இலங்கையின் மிக அழகான மலைகளில் ஒன்றாகும்.

இந்து சமய நம்பிக்கைகளின் படி இது சிவனின் காலடிச் சுவடாக கருதப்படுவதோடு கௌதம புத்தரின் காலடிச் சுவடாக பௌத்தர்களால் கருதப்படுகின்றது, இஸ்லாமியர்கள் இதை பாவா ஆதம் மலை – ஆதாம் ஆதாமின் காலடிச் சுவடாக கருதுகின்றனர்.


சராசரி சராசரி மழைவீழ்ச்சி 5,000 துயி ஆகும். ஆறு மாதங்களுக்கு ஒரு நல்ல மழை உள்ளது. தென்மேற்கு பருவமழை தொடங்கும் மே – ஜூன் – ஜூலை மாதங்களில் அதிக மழைப்பொழிவு காணப்படுகிறது. டிசெம்பர் முதல் ஜனவரி வரையிலான மழை, பெப்ரவரி மிகவும் குறைவாகவே இருக்கும்.

# கலைக் கதிர்



# மண்ணின் மணமாய் படிக்கம்

## விமர்சனம்




தமிழில் எழுதப்படும் இலக்கிய புனைவுகள் யதார்த்தம் ,மீயதார்த்தம் போன்ற போக்குகளை தழுவியதாக எழுதப்படுவதனை நாம் காண்கிறோம். படைப்புக்களின் நில அமைப்பியல் கூறுகளை அவதானிக்கையில் அவை படைப்பாளியின் சொந்த நிலம் சார்ந்தோ அல்லது படைப்பாளிக்கு அன்னியமான நிலப்பரப்பு குறித்தோ அமைவதனை காணலாம். சிறுகதை ,நாவல் போன்ற புதினங்கள் நிலப்பரப்பினை தழுவியே எழுதப்படுகின்றன. சில புதினங்களை வாசிக்கையில் பொதுவாக எந்த நிலப்பரப்பினை மையமாக வைத்து கதையாடல் நகர்கிறது என்பதை ஊகிக்க முடியாது இருக்கும் அல்லது படைப்பில் வருகின்ற நிலப்பரப்பு எல்லா நிலத்துக்கும் பொருந்தக்கூடிய வகையில் கதையாடல் நகர்ந்திருக்கும். எவ்வாறாயினும் நிலப்பரப்பு ஒன்றினை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுட்டாது படைப்பு ஒன்று எழுவதில்லை எனக்கூறிவிட முடியும்.

எழுத்தாளர் ஆ.தங்கராசா அவர்கள் மட்டக்களப்பு ஆரையம்பதியில் வசித்து வருபவர். பல வருடங்களாக சிறுகதை எழுதி வரும் எழுத்தாளர். தாயதி பதிப்பகத்தின் வெளியீடாக இவரின் படிக்கம் சிறுகதை தொகுதி வெளியாகியுள்ளது. மொத்தமாக பதினாறு சிறுகதைகள் இந்த புத்தகத்தில் இருக்கின்றன. இந்த கதைகளில் பெரும்பாலானவை தான் வாழும் பிரதேசம் குறித்து எழுந்த கதையாடல்களே. அந்த வகையில் பார்க்கையில் இந்த தொகுதி நிலம் சார்ந்த அழகியல் கூறுகளை அதிகம் கொண்ட தொகுதியாக இருக்கிறது.

ஒரு நல்ல தொகுதிக்கு பெயர் அமைவதும் கலைத்துவமாய் காணக்கூடியதாக இருப்பது சில தொகுதிகளில் தான். அந்த வகையில் இந்த தொகுதிக்கு படிக்கம் என பெயர் சூட்டப்பட்டிருப்பதும் பல்வேறு சிந்தனைகளை கிளறி விடுகிறது. படிகம் என்பது வெற்றிலை குதப்பி துப்பி விடுவதற்காக பாவிக்கப்படும் பாத்திரமாகும். இது பொதுவாக வெண்கலத்திலேயே காணக்கிடைக்கும் ஒரு பாத்திரம். ஏன் இவ்வாறு ஒன்றை தேர்வு செய்தனர் என சிந்திக்கையில் புலப்படுவதாவது, பொதுவாகவே சமூகத்தில் கழிக்கப்படும் ஒன்றை முன்னிறுத்துவதனூடே கதைசொல்லியானவர் விளிம்பு நிலை கதையாடல்களை முன்னிறுத்துகிறார் எனலாம். அதற்கேற்றாற்போல் இதில் காணப்படும் கதைகள் அனைத்துமே நலிந்த மக்கள் தொடர்பிலானவைகளே.

இந்த தொகுதியிலே துறைக்காறன் கதையானது ஆற்றிலே வள்ளம் விடும் ஒருத்தனின் கதையாகும். துறை எனப்படும் சொல் விசேடமாக மட்டக்களப்பு பகுதிக்கேயுரிய சொல்லாடலாகும். எழுவான்கரையினையும் படுவான்கரையினையும் ஊடறுத்து செல்கின்ற மட்டக்களப்பு வாவியினூடே மக்கள் பயணிப்பதற்காக வள்ளங்களை நிறுத்தி வைக்கும் இடமே துறையாகும். அக்காலத்திலே மண்முனை துறை,அம்பிளாந்துறை துறை களுதாவளை துறை மற்றும் மண்டூர் துறை என்பன பிரபலமான துறைகளாக விளங்கின. தற்போது பாலங்கள் அமைக்கப்பட்டமையால் அநேகமான துறைகள் வழக்கொழிந்து ஓரிரு துறைகளே இயக்கத்தில் இருக்கின்றன. செம்பாப்போடி என்ற பாத்திரத்தினூடே மட்டக்களப்பு துறைகளின் வாழ்வியல் கோலங்களை விளக்குவதாக இந்த கதை அமைந்துள்ளது.

தீர்த்தக்கரையினிலே கதையானது மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலய தீர்த்தத்திற்கு செல்லும் நினைவுகளை பகருகின்ற ஒரு சிறுகதையாகும். இந்த தீர்த்தக்கரை என்ற சொல்லாடல் கூட மட்டக்களப்பிற்கே உரிய தனித்துவமான பதமே. பாரதியார் தீர்த்தக்கரை என்ற சொல்லை எந்த அர்த்தத்தில் பாவித்தாரோ தெரியவில்லை. ஆனால் மட்டக்களப்பில் தீர்த்தக்கரை என்பது அமிர்தகழி தீர்த்தத்தினையே குறிக்கும். 'நினைவிடை தோயும்' இந்த கதையினிலே பல்வேறு நிலக்கூறுகளும் கொண்டாட்டங்களும் நினைவுகூரப்படுவது குறிப்பிடத்தக்கது தேர்வு செய்த பாத்திரங்களினூடே ஒரு காலத்தின் சமூக அமைப்பும் அதன் பாரம்பரியங்களும் நினைவு கூரப்படுதலினை இந்த கதையில் காணலாம்.

'உப்புக்கரைச்சை' சிறுகதையானது எண்பதுகளின் நடுப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற வன்முறைகளின் அனர்த்தங்களை பதிவு செய்கிறது. கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் நிகழ்ந்த வன்முறைகளில் தனது குடும்பத்தை இழந்த சாமான்யன் ஒருவனின் கதையே இது. இது இனப்பிரச்சினையில் பாதிக்கப்பட்ட ஒரு தனி மனிதனின் கதையல்ல. மாறாக ஒரு காலத்தில் வன்முறைகளினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் கதையாக அமைகிறது.

ஒட்டிக்கூடு கதையானது மட்டக்களப்பு வாவியை நம்பி மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் பாடுகளை பேசுகின்ற கதையாகும். இதில் பிரதான பாத்திரங்களாக இரு மீனவர்களை முன்னிறுத்தி அவர்களின் பார்வையினூடே மீனவர்களின் வாழ்வியல் முறை அலசப்படுகிறது. இந்த கதையில் மீனவர்களின் மீன்பிடி முறைகள் மற்றும் அதற்காக அவர்கள் பயன்படுத்தி வருகின்ற உத்திகளும் கூறப்படுகின்றது.

புதிர் கதையானது விவசாயிகள் அறுவடை முடிந்ததும் கொண்டாடுகின்ற புத்தரிசி சமைத்து உண்கிற பாரம்பரியத்தை கூறுகின்ற கதையாகிறது. இந்த நாள்களில் இந்த மாதிரியான அழகியல் கூறுகள் நமது வாழ்வியலில் அற்றுப்போய் விட்டமை துயரமே.

ஆரையம்பதி ஆ.தங்கராசா என்ற மூத்த எழுத்தாளரின் சிறுகதைகள் மண்வாசனையோடு கலந்தவையாக உள்ள அவரது சொந்த மண்ணின் கதைகளாக வாசகர்கள் மனதில் தடம் பதிக்கின்றன.

## இன்றைய பெண்கள்

இரும்புச் சிறையுடைத்து
அரும்பிய கனவுகளை
நனவாக்கி இன்று
விரும்பிய தொழிலுடன்
விஞ்ஞான வளர்ச்சியுடன்
அஞ்ஞான இருள் நீங்கி
விட்டில்கள் நாமும்
விடியல்கள் என்றே
எட்டுத் திசையகளும்
உரக்கின்றன அவள் குரல்கள்
பாரதிக்கும் பரிசளித்தாள்
மடமைகள் தகர்த்து
பார்வையால் துகிலுரியும்
பாருதித்த மாந்தருக்கு
கண்களால் தீ பாய்ச்சி
தீயெண்ணம் கருக்குகின்றாள்
எனக்கு நானே
வேலியென்று சுயத்தாழ்கள்
பல அணிந்தே
பிரசினங்கள் தீண்டாது காவல்கள்
காக்கின்றாள்

விதியென்று முடங்கி
முயற்சிகளை முடக்காது
வழிகள் பல உண்டென
விழித்தெழுந்து
உயர்ந்திட்டால்
பழிகள் கண்டும்
நாணற் புல்லாகாது
வீறுடன் மூங்கிலாய்
நேருறு பாதையில்
வீறு நடை போடுகின்றாள்

இன்னும் வளர வேண்டும்
இன்னல்கள் நீக்க வேண்டும்
வறுமை ஒழிக்க வேண்டும்
உலகே வாழ்த்த வேண்டும்

புதுயுகத்தின்
புரட்சிப்பெண்ணே...
சாதிக்கப் பல உண்டு
சோர்ந்து நீ போகாதே...

குகதா
கிளிநொச்சி

## மௌனத்தின் தேடல்

கரையற்று நீந்துகின்றது என் துயர்
என் ஞாபகப்பந்தலில்
வழிப்போக்கர்களாய்
வந்தவர்கள் யார் யாரோ
திரும்பிப்பார்த்தவன்
நீ மட்டுமே
காலப்புதையலுக்குள்
கண்ணீரால் புதைந்த
என் கனவுகளுக்கும்
மொழியுண்டு என்பதைக் கண்டறிந்தாய்

உள்ளத்தில் அணைபோட்டு
தடுத்துவைத்த நேசம்

பலமுறை
விவாதத்தின் பின்
ஒரேயொரு சொல்லில்
விதியானது
எனக்கு நீ யென்று

இன்று
முடிச்சுகளற்ற
உன் பேச்சில்
தெளிவற்றுப்போகிறேன்....
அறிவாயா வழிப்போக்கனே
நான் மன்றாடியது
ஒரு மாலைக்காக

வ.ஜே.சபீனா - திருகோணமலை

## கவிதைக்கோர் மகுடம்

எண்ணப் போக்கை மனதில் வரைந்து
எழுத்துக் கோர்வைகள் தாளில் நடந்து
எதையோ நினைத்து அதையே புனைந்து
ஏட்டில் எழுதும் சொற்களின் சுவையோ?

உள்ளக் கிடக்கை உணர்த்தும் பொருளை
உருகும் நொடியில் படியும் கனவை
உள்ளது போலவே சொல்லும் திறனோ!
உண்மை மறைத்து உரைப்பதும் சரியோ?

கற்பனைக் கருவில் முளைத்த சிசுவாய்
கணத்தில் உதிக்கும் அறிவின் தெளிவோ!
கண்டதை விளக்கும் காட்சிப் படிமமோ?
கவிதை என்பதை எவ்விதம் சொல்வதோ?

சம்பூர் சமரான்

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

## இலக்கிய நயம்

# காதலர்கள் ஊரைவிட்டு ஓடுதல்

● யாழ். மகள் சைந்தவி



கலித்தொகை பாடலில் – களவு ஒழுக்கத்தில் இடையூறு ஏற்பட்டதால் தலைவன் தலைவியை அழைத்துக் கொண்டு ஊரை விட்டுச் செல்கிறான். இச்செய்தியைக் கேள்விப்படுகிறாள் செவிலி. அழுது புலம்பியபடி தன் மகளைத் தேடிக் காட்டுவழியில் செல்கிறாள் அவள். மகளைத் தேடி வரும் செவிலி ஒழுக்கத்தில் சிறந்த அந்தணர் சிலரை வழியில் காண்கிறாள். அவர்களிடம்,

இவ் இடை

**என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும்**
**தம்முளே புணர்ந்த தாம் அற புணர்ச்சியர்**
**அன்னார் இருவரைக் காணிரோ? பெரும !**

என்று கேட்கிறாள்.

அந்தணர்களே! என் மகள் ஒருத்தியும், வேறொருத்தியின் மகனும் மற்றவர் அறியாது தமக்குள் கூடியவர் இன்று மற்றவர் அறியுமாறு கூடி அவர்கள் சென்றுவிட்டனர். அவர்கள் இருவரையும் இந்தக் காட்டில் கண்டீர்களா? என்பது இப்பாடல் அடிகளின் பொருள். இவ்வாறு வளர்த்த பாசம் தாளாமல் உடன்போக்கில் சென்ற தன் மகளைத் தேடிச் செல்லும் செவிலித் தாயைப் பாலைத் திணைப் பாடல்களில் காண முடிகிறது.

தலைவன் பிரிந்து செல்வதைத் தோழி தன் நாவன்மையால் தடுத்து விடுவதும் உண்டு. செலவு என்றால் பயணம், அழுங்குவித்தல் என்றால் தவிர்த்துவிடல் அல்லது நிறுத்தச் செய்தல் ஆகும். 'பயணம் தவிர்த்து விடல்' என்பதே 'செலவு அழுங்குவித்தல்' என்பதற்குச் சரியான பொருள் ஆகும். தோழி தலைவியின் இளமை தொலைதல் பற்றித் தலைவனிடம் கூறுகிறாள். அவன் பிரிந்து செல்வதைக் கைவிடுகிறான். மலை கடந்து தேடும் பொருள், காடு கடந்து தேடும் பொருள் பொருள் ஆகாது. அருந்ததி போன்ற கற்பினை உடைய தலைவியைப் பிரியாது இருத்தல்தான் உண்மையான பொருள் என்று தலைவனுக்கு உணர்த்துகிறாள் தோழி.

**மலை இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ?...**
**கடன் இறந்து செயல் சூழ்ந்த பொருள் பொருள் ஆகுமோ?**
**வடமீன் போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள்**
**தடமென் தோள் பிரியாமை பொருள்**

# பட்ட மரமும் பச்சைக் கொடியும்

சீலனுடைய அப்பா பெரிய பரந்தனில் தெரிந்தவர் ஒருவரிடம் காணியை எடுத்து அதிலே கொட்டில் ஒன்றை அமைத்துக் கொண்டார். அருகில் எஞ்சியிருந்த சிறிய காணியில் தோட்டம் செய்வதும் வேறு யாருக்காவது வேலையிருந்தால் போய்ச் செய்வதும் சீலனின் அப்பாவின் தொழிலாக இருந்தது. பரந்தனில் இருந்த பாடசாலை ஒன்றில் சீலன் சேர்க்கப்பட்டான். நாள்கள் கடகடவென உருண்டோடத் தொடங்கின. நாட்டின் நிலைமை வரவர மோசமாகிக் கொண்டே வந்தது. அதற்கேற்றவாறு வீட்டு நிலைமையும் மோசமானது. சீலனின் அப்பாவிற்கு வேலை கிடைத்த போது வீடு மகிழ்ச்சியாக இருக்கும் இல்லாவிட்டால் இருப்பதை வைத்துக் கொண்டே சீலனின் அம்மா சமாளிப்பதற்கு பழகிக் கொண்டாள்.

திடீரென ஒரு நாள் சீலனின் அப்பாவின் உடல் நிலை பாதிப்படைந்தது. வைத்தியசாலையில் சிகிச்சைக்காக கொண்டு போய் சேர்த்த போது அங்கேயே மறித்து விட்டார்கள். மலேரியாக் காய்ச்சல் ஏற்பட்டதால் ஒரு வாரம் வைத்தியசாலையில் சீலனின் அப்பா இருந்த போது வீட்டில் வறுமை கோரத் தாண்டவமாடியது.

சீலன் பாடசாலைக்கு போவது ஒழுங்கில்லாமல் போனது. சீலனின் தம்பியையும், தங்கையையும் பராமரிப்பது அம்மாவுக்கு வீட்டில் சிறு சிறு உதவிகள் செய்வது என்பன சீலனுக்கு நாளாந்த கடமைகள் ஆகின. ஒரு வாரத்தின் பின் தோட்ட வேலை செய்யத் தொடங்கினார். சீலன் பாடசாலைக்குப் போகத் தொடங்கினான். வீட்டிலும் வறுமையின் கோரப்பிடி லேசாகத் தளரத் தொடங்கியது.

இந்த அமைதி நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. சீலனின் அப்பாவிற்கு மறுபடியும் காய்ச்சல் வந்தது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதும் யாரும் எதிர்பாராத கோரம் நடந்தேறியது. அவன் அப்பா இறந்து போனார். மகிழ்ச்சியில்லாவிட்டாலும் அமைதிக்கு மட்டுமாவது இருந்த ஒளி விளக்கு அணைந்து போனதால் வறுமையின் கோர இருள் அவர்களைப் பற்றி ஆட்டியது. சீலனின் அம்மா ஏதோ தனக்குத் தெரிந்த கூலி வேலை, தையல் வேலை என்று செய்து உயிர்களை மட்டும் காப்பாற்றி வந்தாள்.




ஆனாலும் பொருள்களின் விலை அதிகரிப்பு அவர்களைத் திணறடித்தது. சீலனின் பிஞ்சுக் கால்களும் வீட்டின் அடுப்பு எரிவதற்காய் வழிதேடி நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஒரு நாள் சீலன் அம்மாவிடம் ஓடி வந்து "அம்மா பக்கத்தில் இருக்கும் பிள்ளைகள் பஸ்ராண்டுக்குப் போய் கச்சான் விக்கினம் நானும் போகட்டுமா?" என்று கேட்டதும் சீலனின் தாய்க்கு வானமே தலையில் இடிந்து விழுந்ததைப் போல தலையைச் சுற்றியது. இருந்தாலும் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு "தம்பி பள்ளிக்குப் போக வேணும்" என்றாள். "நான் இனிமேல் பள்ளிக்கூடம் போகேல்லை" என்றான் சீலன். அதற்க்கு மேல் சீலனின் அம்மா எதுவும் கதைக்கமுடியவில்லை.

அடுத்த நாள் தொடக்கம் சீலனின் அம்மா வறுத்துக் கொடுத்த கடலையை பைகளில் போட்டு காலை முதல் மாலை வரை பேருந்து தரிப்பிடத்திற்கு வரும் பேருந்துகளில் எல்லாம் ஏறி இறங்கி விற்கத் தொடங்கினான். முதல் நாள் பேரூந்து தரிப்பிடத்திற்குள் நுழைந்த போது மனதில் இனம் புரியாத கலக்கம், பயம் என்பன கண்ணை மறைத்தன. இருந்தாலும் ஒருவாறு தன்னைத் திடப்படுத்திக் கொண்டு முதல் முதலாக ஒருவருக்கு அருகில் போய் நின்று கொண்டு "ஐயா கச்சான் வேணுமா? என்று கேட்டான். அவர் பதிலேதும் பேசாமல் எதிர்ப்பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

"கடவுளே ஏன் எங்களை இப்படிச் சோதிக்கின்றாய்?" இதுதான் எங்களுக்கு வாழ்க்கை என்றால் இந்த வாழ்வு எனக்கு ஏன்?" மனிதர்கள் நல்லவர்கள்" சிந்திக்கத் தெரிந்தவர்கள் என்பதெல்லாம் வெறும் பாடப்புத்தகத்தில் மாத்திரம் தானா?" என்பது போன்ற எண்ணங்கள் சீலன் மனத்திரையில் மாறிமாறி ஓடின. இதற்கிடையில் அவனின் அப்பாவின் நினைவு வந்ததும் அது அவனை அறியாமலேயே அழுகையை வரவழைத்து விட்டது. ஒருவாறு அழுகையை அடக்கிக் கொண்டு ஓர் மரத்தடியில் போயிருந்து அழுதான். தன்னை யாராவது கவனிக்கிறார்களா? என்று பார்த்தான். யாருமே அவனைக் கவனிக்காமல் போய்க் கொண்டிருந்தனர்.

சீலனின் மனதில் தான் உலகத்தினால் தனித்து விடப்பட்டிருப்பதான ஓர் உணர்வு தொற்றிக் கொண்டது. உலகமே இருண்டு போனது போலவும் தன் இதயமே வெடித்துச் சிதறுவது போலவும் இருந்தது. இதுவரை படித்த பாடங்களில் வரும் நல்ல மனிதர்கள், கடவுள் என்பவர்கள் கூட வெறும் ஏட்டுக் கல்விக்குத்தான் சரி, அதெல்லாம் நடைமுறையிலிருந்து எவ்வளவு தூரம் விலகியிருக்கின்றது என்பதை உணர்ந்த போது அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மனிதர்கள் என்றால் மற்றவர்களுக்குத்துன்பம் வரும் போது உதவுவார்கள் என்றெல்லாம் படித்தது வீணா? எங்களுடைய உறவினர்கள் கூட இப்போது எங்கள் வீட்டுப் பக்கம் வருவதில்லை.

(தொடரும்)



விவசாயி



# பூமியை அச்சுறுத்தும் காலநிலை மாற்றம்

அதிகரித்த வெப்ப அலைகள், வறட்சி மற்றும் வெள்ளம் போன்றவை ஏற்கனவே தாவரங்கள் மற்றும் விலங்குகளின் தாங்குதிறன் எல்லைகளை விட அதிகமாக உள்ளதோடு மரங்கள் மற்றும் பவளப்பாறை இனங்களில் பாரிய அழிவுகளை உண்டாக்குகிறது. ஒரே நேரத்தில் நிகழ்கின்ற இந்த காலநிலை உச்சநிலைகள் நிர்வகிக்க கடினமாக உள்ள அடுக்கடுக்கான தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இவை குறிப்பாக ஆபிரிக்கா, ஆசியா, மத்திய மற்றும் தென் அமெரிக்கா, சிறிய தீவுகள் மற்றும் ஆர்டிக் பகுதியில் மில்லியன் கணக்கான மக்களின் உணவு மற்றும் நீர் பாதுகாப்பின்மை தொடர்பான கடுமையான அச்சத்தை வெளிப்படுத்துகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் (UN) விஞ்ஞானிகளின் கருத்துப்படி காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் மக்களும் பூமியும் அச்சுறுத்தப்படுகின்றனர். அடுத்த இரண்டு தசாப்தங்களிற்கு புவி வெப்பமயமாதல் காரணமாக சுற்றுச் சூழற்தொகுதி பாதிப்படைதல், இனங்களின் அழிவு, கொடிய வெப்ப அலைகள் மற்றும் வெள்ளம் போன்ற தவிர்க்க முடியாத பன்முக தன்மையுள்ள காலநிலை ஆபத்துகளை உலகம் எதிர்கொள்ளும் என அவர்கள் எச்சரிக்கிறார்கள்.

அண்மையில் (பெப்ரவரி 2022) வெளியிடப்பட்ட அரசுகளுக்கிடையேயான காலநிலை மாற்றம் (ஐ.பி.சி.சி - IPCC) பற்றிய குழுவின் அறிக்கைப்படி, மனிதனால் தூண் டப்பட்ட காலநிலை மாற்றமானது இயற்கையில் மற்றும் உலகம் முழுவதும் உள்ள பில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கையில் ஆபத்துக்களையும் பரவலான இடையூறுகளையும் ஏற்படுத்துகின்றது என ஐ.நா. விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதனைக் குறைக்க பல்வேறு முயற்சிகள் இருந்த போதிலும் மக்கள் மற்றும் சூழற்தொகுதியின் குறைந்த பட்ச திறன் என்பவற்றின் மூலம் சமாளிக்க மிகவும் கடினமாக உள்ளது என அவர்கள் கூறுகிறார்கள்.

'இந்த அறிக்கையானது செயலற்ற தன்மையின் விளைவுகளின் ஒரு பயங்கரமான எச்சரிக்கை' என்கிறார், ஐ.பி.சி.சியின் தலைவர் ஹோசுங் லீ. காலநிலை மாற்றம் என்பது நமது நல்வாழ்வுக்கும் ஆரோக்கியமான கிரகத்திற்கும் பெருகிவரும் அச்சுறுத்தல் என்பதை காட்டுகிறது. மற்றும் இன்று அதிகரிக்கும் காலநிலை ஆபத்துகளிற்கு மக்கள் எவ்வாறு மாற்றியமைக்கப்படுகிறார்கள் என்பதனையும் இயற்கை எவ்வாறு பதிலளிக்கிறது என்பதனையும் நமது செயல்களே வடிவமைக்கின்றன.

அடுத்த இரண்டு தசாப்தங்களிற்கு 1.5°C (2.7°F) எனும் புவி வெப்பமடைதல் வீதத்தில் உலகம் தவிர்க்க முடியாத காலநிலை அபாயங்கள் பலவற்றை எதிர்கொள்கிறது. தற்காலிகமாக கூட அதிகமாகும் இந்த வெப்பமயமாதல் நிலை, கடுமையான பாதிப்புகளைக் கூடுதலாக ஏற்படுத்தும். அவற்றில் சில மீள முடியாததாக இருக்கும் உட்கட்டமைப்பு மற்றும் தாழ்வான கரையோர குடியிருப்புக்கள் உள்ளிட்ட சமூகத்திற்கான ஆபத்துகளை அதிகரிக்கும்.

IPCC பணிக்குழு II இன் அறிக்கையின் கொள்கை வகுப்பாளர்களின் சுருக்கமானது, 'காலநிலை மாற்றம் 2022 தாக்கங்கள், இசைவாககங்கள் மற்றும் பாதிப்புக்கள்' எனும் தலைப்பில் ஐ.பி.சி.சியின் 195 அரசாங்கங்களின் உறுப்பினர்களினால் பெப்ரவரி 14 தொடங்கி இரண்டு வாரங்களுக்கு மேல் நடைபெற்ற ஒரு மெய்நிகர் மூல அமர்வில் பெப்ரவரி 27 அன்று, அங்கீகரிக்கப்பட்டது.

### அவசர நடவடிக்கை அவசியம்

அதிகரித்த வெப்ப அலைகள், வறட்சி மற்றும் வெள்ளம் போன்றவை ஏற்கனவே தாவரங்கள் மற்றும் விலங்குகளின் தாங்குதிறன் எல்லைகளை விட அதிகமாக உள்ளதோடு மரங்கள் மற்றும் பவளப்பாறை இனங்களில் பாரிய அழிவுகளை உண்டாக்குகிறது. ஒரே நேரத்தில் நிகழ்கின்ற இந்த காலநிலை உச்சநிலைகள் நிர்வகிக்க கடினமாக உள்ள அடுக்கடுக்கான தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இவை குறிப்பாக ஆபிரிக்கா, ஆசியா, மத்திய மற்றும் தென் அமெரிக்கா, சிறிய தீவுகள் மற்றும் ஆர்டிக் பகுதியில் மில்லியன் கணக்கான மக்களின் உணவு மற்றும் நீர் பாதுகாப்பின்மை தொடர்பான கடுமையான அச்சத்தை வெளிப்படுத்துகின்றது. பெருகிவரும் உயிர் இழப்பு, இனப்பல்வகைமை மற்றும் உட்கட்டமைப்பு, போன்றனவற்றை தவிர்ப்பதற்கு லட்சியமுடைய, துரிதப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் காலநிலை மாற்றத்திற்கு இசைவானதும் அதே நேரத்தில் உருவாகும் பச்சைவீட்டு வாயு வெளியீடுகளின் விரைவான குறைப்பிற்கும் தேவை என்று விஞ்ஞானிகள் வலியுறுத்துகின்றனர். இதுவரை, இசைவாக்கத்தின் முன்னேற்றம் சீரற்றதாகவும் அதிகரித்து வருகின்ற ஆபத்துக்களிற்கு எடுக்கப்பட்ட நட வடிக்கை மற்றும் அதனை எவ்வாறு சமாளிக்க வேண் டும் என்பவற்றிற்கு இடையேயான இடைவெளி அதிகரித்து வருவதனையும் புதிய அறிக்கை கண்டறிந்துள் ளது. இந்த இடைவெளியானது குறைந்த வருமானம் கொண்ட மக்களிடையே மிகப்பெரியதாகக் காணப்படு கிறது.

பணிக்குழு II இன் அறிக்கையானது ஐ.பி.சி.சியின் ஆறாவது தவணை மதிப்பீட்டு அறிக்கை (AR6) ஆகும். இது இந்த ஆண்டு நிறைவு செய்யப்படும். 'இந்த அறிக்கையானது ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கும் காலநிலை மக்கள் மற்றும் இனப்பல்வகைமை மற்றும் இயற்கை, சமூக மற்றும் பொருளாதார அறிவியல்களை ஒருங்கிணைத்து முந்தைய IPCC மதிப்பீடுகளை விட, இன்னும் வலுவாக உள்ளது' என்றார் ஹோசுங் லீ. உடனடியான மற்றும் நீண்ட குறிக்கோளுடைய காலநிலை அபாயங்களை நிவர்த்தி செய்வதற்கான அவசர நடவடிக்கைகளை இது வலியுறுத்துகிறது. அரைகுறையான நடவடிக்கைகள் பொருத்தமானவையாக இருக்கமாட்டாது.

பாரியளவு ஆபத்துக்களை எதிர்கொள்ளும் நகரங்கள் இந்த அறிக்கையானது காலநிலை அபாயங்களைக் குறைப்பதற்கு மட்டுமல்லாது மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் இயற்கையின் திறனின் நீண்ட புரிதலை ஏற்படுத்துகின்றது. 'ஆரோக்கியமான சூழற்தொகுதியானது காலநிலை மாற்றத்திற்கு அதிக மீள்தன்மை கொண் டவையாகவும் உணவு மற்றும் சுத்தமான நீர் போன்ற வாழ்க்கைக்கு முக்கியமான சேவைகள வழங்கவல்லனவையாகவும் காணப்படுகின்றன' என IPCC வேலை குழு II இன் இணைத்தலைவர் ஹான்ஸ் - ஓட்டோ போர்ட்னர் தெரிவிக்கின்றார்.



ஆக்கம்: - லினோஜா சஜந்தன்
உதவி விரிவுரையாளர்
விவசாயபீடம்
யாழ்ப்பாணாப் பல்கலைக்கழகம்

'சீரழிந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதன் மூலமும் 30 முதல் 50 சத வீதமான பூமியின் நிலம், நன்னீர் மற்றும் கடல் வாழ்விடங்களை திறம்பட மற்றும் சமமாக பாதுகாப்பதன் மூலமும் காபனை உறிஞ்சி சேமித்து இயற்கையின் திறனில் இருந்து சமூகம் பயனடையலாம். நம்மால் நிலைபேறான அபிவிருத்தியை துரிதப்படுத் துகின்ற வளர்ச்சியின் மூலம் அடையமுடியும். ஆனால் போதுமான நிதி மற்றும் அரசியல் ஆதரவு அவசியம்.'

காலநிலை மாற்றமானது இயற்கை வளங்களின் நீடிக்க முடியாத பயன்பாடு, பெருகிவரும் நகரமயமாக்கல், சமூக ஏற்றத்தாழ்வுகள், தீவிரமான நிகழ்வுகளினால் ஏற்படுகின்ற இழப்புகள் மற்றும் சேதங்கள் மற்றும் கொவிட் தொற்றுநோய் போன்ற எதிர்கால வளர்ச்சிக்கு ஆபத்தான உலகளாவிய போக்குகளுடன் தொடர்பு கொள்கிறது என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

அரசுகள், தனியார் துறை, சிவில் சமூகம் - அனைவரையும் உள்ளடக்கி ஒன்றாக வேலை பார்த்து ஆபத்து குறைப்பு அத்துடன் சமத்துவம் மற்றும் நீதி என்பவற்றிற்கு முன்னுரிமை வழங்கி முடிவெடுத்தல் மற்றும் முதலீடுகளின் ஊடாக இந்த பல்வேறு சவால்களை சமாளிப்பது என்பதை எங்கள் மதிப்பீடு தெளிவாகக் காட்டுகிறது' IPCC பணிக்குழு II இன் இணைத் தலைவர் டெப்ரா ராபர்ட்ஸ் கூறினார்.

இந்த வழியில், வெவ்வேறு ஆர்வங்கள், மதிப்புகள் மற்றும் உலகக் கருத்துக்கள் நட்புறவாடப்படலாம்.

(17பக்கம் பார்க்க)



அண்மைக்காலமாக
வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ள
ஆஸ்திரேலியாவின் ஒரு பகுதி




ஐபிசிசியின் 'காலநிலை மாற்றம் 2022: தாக்கங்கள், இசைவாககங்கள் மற்றும் பாதிப்புக்கள்' எனும் தலைப்பில் பிப்ரவரியில் நடைபெற்ற மெய்நிகர் மூல அமர்வு

# உளுந்து தரும் நன்மைகள்

உடலில் உளுத்துப்போன உடல் உறுப்புகளை வளர்க்கும் ஆற்றல் கொண்டதால் தான் இதற்கு உளுந்து என பெயர் வந்தது. மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் தானிய வகைகளில் உளுந்து மிக முக்கிய இடத்தை வகிக்கிறது.

உளுந்தில் கரையும் மற்றும் கரையாத நார்ச்சத்துக்கள் உள்ளன. இந்த நார்ச்சத்துக்கள் உணவினை நன்கு செமிக்கச் செய்வதுடன் உணவில் உள்ள ஊட்டச்சத்துக்களையும் உடல் உறிஞ்ச உதவுகின்றன. மேலும் நார்ச்சத்தானது வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல், வாயுத்தொல்லை உள்ளிட்ட செரிமான பிரச்சினைகள் ஏற்படாமல் பாதுகாக்கின்றன.

செரிமான பாதையில் உள்ள செரிக்காத நச்சுப்பொருள்களை கழிவாக மாற்றி வெளியேற்றவும் உளுந்து உதவுகிறது. எனவே உளுந்தினை அடிக்கடி உணவில் சேர்த்து செரிமானம் தொடர்பான பிரச்சினைகளிலிருந்து விடுபடலாம். உளுத்தம் பருப்பில் எண்ணற்ற நன்மைகள் உள்ளன. அதிலும் பெண்கள் உளுத்தம் பருப்பை சாப்பிடுவது மிகவும் நல்லது.

1. கடுமையான மற்றும் கொடிய நோயின் பாதிப்பிலிருந்து விடுபட்டவர்கள் உளுந்தை களியாகவோ, கஞ்சியாகவோ அல்லது அரிசி சேர்த்து அரைத்து வேக வைத்து உணவாக சாப்பிட்டு வந்தால் தேகம் வலுப்பெறும், எலும்பு, தசை, நரம்புகளின் ஊட்டத்திற்கு மிகவும் நல்லது.

2. உளுத்தம்பருப்புடன் தவிடு நீக்காத பச்சரிசி, வேர்க்கொம்பு, வெந்தயம் சேர்த்து அரைத்து களி செய்து பனைவெல்லத்துடன் கலந்து சாப்பிட்டு வந்தால் உடலில் உள்ள அதிகபடியான சூடு தணியும்.

3. உளுந்து வடை பசியைப் போக்கும், உடலுக்கு குளிர்ச்சியைத் தரும், மற்றும் பித்தத்தைக் குறைக்கும்.

4. சிறு குழந்தைகளுக்கு உளுந்து சேர்ந்த இட்லி கொடுப்பது நல்லது. அவை குழந்தையின் வளர்ச்சியில் முக்கிய பங்கெடுக்கும். மேலும் எலும்புகள் வலுப்பெறும்.

5. நாற்பது வயதைக் கடந்த பெண்களுக்கும், பருவம் அடைந்த பெண்களுக்கும் கண்டிப்பாக ஊட்டச்சத்து அதிகம் தேவை. உளுந்தை கஞ்சியாக செய்து கொடுத்து வந்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும்.

6. உளுந்து ஊற வைத்த நீரை மறுநாள் அதிகாலை அருந்தி வர சிறுநீர் சம்பந்தமான பிரச்சினைகள் சரியாகும்.

7. உளுந்தில் உள்ள தாது உப்புக்கள் மற்றும் விற்றமின்கள் உடலில் சீரான வளர்ச்சி மாற்றம் நடைபெற உதவுவதோடு உடலில் வலி உள்ள பகுதிகளை சரிசெய்கின்றன.

8. உளுந்துடன் முட்டை மற்றும் பஞ்சுடன் சேர்த்து எலும்பு முறிவுச் சிகிச்சைக்கு கட்டுப்போடும் பழக்கம் நாட்டு மருத்துவத்தில் உண்டு. உளுந்தில் உள்ள எதிர்ப்பு அழற்சி பண்பானது உடலினை அழற்சியிலிருந்து பாதுகாக்கிறது.

9. உளுந்தம்பருப்பில் உள்ள கல்சியம், மக்னீசியம், பொற்றாசியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து போன்றவை எலும்புகளின் வளர்ச்சி மற்றும் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

10. உளுத்தம்பருப்பில் உள்ள ஊட்டச்சத்துக்கள் சரும அழற்சி, பரு உள்ளிட்ட சருமக் காயங்கள், கரும்புள்ளிகள் உள்ளிட்ட சருமப் பிரச்சினைகளுக்கு நல்ல தீர்வைத் தரும்.

11. உளுத்தம்பருப்பில் உள்ள புரதச்சத்தானது தசைகளின் வளர்ச்சியையும், ஆரோக்கியத்தையும் மேம்படுத்துகிறது. தசைகளை உறுதியானதாக மாற்றுகிறது. எனவே உளுந்தினை உண்டு ஆரோக்கியமான தசைகளைப் பெறலாம்.

12. உளுந்தில் உள்ள ஊட்டச்சத்துகளுக்காக கர்ப்பிணிகள் தங்களது உணவில் அடிக்கடி உளுந்தினைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இதில் உள்ள இரும்புச்சத்தானது கர்பிணிகளுக்குத் தேவையான ஹீமோகுளோபின்களை வழங்குவதோடு இரத்த ஓட்டத்தைச் சீராக்கும். மேலும் இதில் உள்ள புரதச்சத்து, நார்ச்சத்து, போலேட்டுகள் போன்றவை கர்ப்பிணிக்கும், குழந்தைக்கும் மிகவும் அவசியமனவையாகும். எனவே கர்ப்பிணிகள் உளுந்தினை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

உளுந்தங்கஞ்சி சாப்பிட்டால் சுருங்காத தோலும், மங்காத கண்களும், பெருக்காத இடுப்பும், தேயாத எலும்புகளும் கிடைக்கும். முதுகு வலி, இடுப்புவலி இரண்டுமே இருக்காது. பெண்களுக்கு கர்ப்பப்பை மிகவும் வலுப்பெறும்.



## உளுத்தங்கஞ்சி

**தேவையானபொருள்கள்**

உளுந்தம்பருப்பு - ஒரு கப் ( கறுப்பு உளுந்து நல்லது)
பச்சரிசி - அரை கப்
வெந்தயம் - ஒரு தேக்கரண்டி
பூண்டு - 20 பல்
வெல்லம் அல்லது கருப்பட்டி - இனிப்புக்கு ஏற்றது போல்
தேங்காய் - அரை பாதி

**செய்முறை** - உளுந்தம்பருப்பு, பச்சரிசி, வெந்தயம், உரித்த பூண்டு அனைத்தையும் போட்டு ஆறு கப் (பருப்பு அளந்த கப்பால் ) தண்ணீர் ஊற்றி அவியவிட வேண்டும்.

இது தயாராவதற்குள் வெல்லம் அல்லது கருப்பட்டியை சிறிதளவு தண்ணீர் ஊற்றி பாகு காய்ச்சி வைத்துக் கொள்ளவேண்டும்.



தேங்காய் அரைத்து பாலும் எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும்.

நன்கு அவிந்தவுடன் இறக்கி சூடாக இருக்கும் போதே நன்கு மசித்துவிட்டு வெல்லப்பாகு, தேங்காய்ப் பால் இரண்டையும் ஊற்றி சூடாக சாப்பிடவும். தேங்காய் துருவியும் போடலாம்.




# வாழைப்பூ தரும் நன்மைகள்

வாழையின் அனைத்துப் பாகங்களும் நமக்குப் பயன்தரக்கூடியவை. குறிப்பாக, வாழைப்பூ அதிகப் பயன்தரக்கூடியது. அற்புத மருத்துவக் குணங்களைக் கொண்டது. வாழைப்பூவில், கல்சியம், பொட்டாசியம், மக்னீசியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, தாமிர சத்து முதலிய சத்துக்கள் நிறைந்துள்ளன. மேலும் விற்றமின் ஏ, விற்றமின் பி1 மற்றும் விற்றமின் சி ஆகிய உயிர்ச் சத்துக்களும் உள்ளன.



### வாழைப்பூவின் மருத்துவப் பயன்கள்

1. வாழைப்பூவை வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் இரத்தத்தில் உள்ள தேவையற்ற கொழுப்புகளைக் கரைத்து வெளியேற்றும். இதனால் இரத்தத்தின் பசைத் தன்மை குறைந்து, இரத்தம் வேகமாகச் செல்லும்.

2. வாழைப்பூவானது இரத்த நாளங்களில் ஒட்டியுள்ள கொழுப்புகளைக் கரைத்து இரத்தத்தை சுத்தமாக்கும். இரத்த அழுத்தம், இரத்த சோகை போன்ற நோய்கள் ஏற்படாமல் தடுக்கும்.

3. இரத்தத்தில் கலந்துள்ள அதிகளவு சர்க்கரையை கரைக்க வாழைப்பூவின் துவர்ப்புத்தன்மை அதிகம் உதவுகிறது. இதனால் இரத்தத்தில் கலந்துள்ள சர்க்கரையின் அளவு குறைகிறது.

4. வயிற்றுப் புண்களை குணமாக்கும் சக்தி கொண்டது வாழைப்பூ.


5. வாழைப்பூவானது மூலநோயின் பாதிப்பினால் மலத்துடன் இரத்தம் வெளியேறுதல், உள்மூலம், வெளி மூலப் புண்கள், மூலக்கடுப்பு, இரத்த மூலம் போன்றவற்றைக் குணப்படுத்தும் தன்மை கொண்டது. சீதபேதியையும் கட்டுப்படுத்தும். வாய்ப் புண்ணைப் போக்கி வாய் நாற்றத்தையும் நீக்கும்.

6. பெண்களுக்கு உண்டாகும் கருப்பைக் கோளாறுகள், மாதவிலக்கு காலங்களில் ஏற்படும் அதிக இரத்தப் போக்கு, வெள்ளைப்படுதல் போன்ற நோய்களுக்கு வாழைப்பூவை உணவில் சேர்த்துக்கொண்டு வந்தால் நல்ல நிவாரணம் கிடைக்கும்.

7. வாழைப்பூவை வேக வைத்தோ அல்லது பொரியல் செய்தோ அடிக்கடி சாப்பிட்டு வந்தால் நீரிழிவு நோய் கட்டுப்படும். அஜீரணக் கோளாறுகள் சரியாகும்.

8. உடல் சூடு உள்ளவர்கள் வாழைப்பூவுடன் பாசிப் பருப்பு சேர்த்து கடைந்து அதனுடன் நெய் சேர்த்து வாரம் இருமுறை சாப்பிட்டு வந்தால் உடல் சூடு குறையும்.

# வாழைப்பூ குழம்பு



**தேவையானவை:**

வாழைப்பூ - 1
சின்ன வெங்காயம் - 1 கப்
தேங்காய்ப்பால் - ஒரு கப்
சீரகம் - 2 தேக்கரண்டி
மஞ்சள்தூள் - கால் தேக்கரண்டி
எண்ணெய் - 2 தேக்கரண்டி
மிளகாய்த்தூள் - 1 தேக்கரண்டி
உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:-** ஆய்ந்த வாழைப்பூவை சுத்தம் செய்து வேக வைத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் புளியைக் கரைத்து விட்டு, வெங்காயம், சீரகத்தைப் போட்டு உப்பு, மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், எண்ணெய் சேர்த்து அடுப்பில் வைத்து கொதிக்கவிடவும். நன்றாகக் கொதித்ததும் வெந்த வாழைப்பூ, தேங்காய்ப்பால் சேர்த்து, எண்ணெய் பிரிந்து வந்ததும் இறக்கவும்.

காலைக்கதிர் வார இதழ்
Kalaikkathir

# அழகான வாழ்க்கை அமையாது நாம் தான் அமைத்துக் கொள்ள வேண்டும்



பிரியமதா பயஸ்

சந்தோசத்தை தேடி நீங்கள் ஓடினால் வாழ்க்கை முழுவதும் ஓட வேண்டும் அதைவிட நீங்கள் இருக்கும் இடத்தை சந்தோசமாக மாற்றுங்கள் .

எதிர்பார்த்த போது கிடைக் காததை எண்ணி வருந்தாமல் அதைவிட சிறந்ததை அடைய உழைப்பை செலுத்த வேண்டும்.

எதிரியைக்கூட நம்புங்கள் ஆனால் கூட இருந்து துரோகம் இழைத்தவரை ஒரு போதும் நம்பாதீர்கள். எதிரி என்றாவது மனம் மாறலாம். துரோகி மர ணிப்பது வரை மனம் மாறமாட் டான்.

பிரச்சினைகளை அடுத்தவரி டம் பகிர்ந்து கொள்ளாதீர்கள் . அப்படி பகிர்ந்து கொள்ளபவர் தகுதியற்றவராக இருந்தால் உடனே தூக்கி எறிந்து விடுங்கள்.

எல்லாவற்றையும் விட குடும்ப உறவுகளை எப்படி வழி நடத்துகிறீர்கள் என்பதை பொறுத்துத்தான் நம் வாழ்க்கை அழகாகும். அதிலும் மனைவியுடனான உறவு முக்கியம்.

விட்டு கொடுத்தல் இல்லா வாழ்க்கை நரகத்தின் நுழைவு வாயிலை திறந்துவிடும்.

புரிதலும், விட்டுக் கொடுத்தலுமே வாழ்க்கை

5 மாத கர்ப்பிணிப் பெண் நீண்ட தொலைவில் இருந்து இரண்டு குடம் தண்ணீர் எடுத்து வந்து, வீட்டின் கதவை லேசாக திறந்து முன்னாடியே இரண்டு குடத்தையும் வைத்து விட்டு, அடுத்த இரண்டு குடம் தண்ணீரை கொண்டு வர சென்றுவிட்டாள்.

அந்தநேரம் அவளின் கணவன் வேலையில் இருந்து மதிய சாப்பாட்டிற்காக வீட்டுக்கு வருகிறான். நல்ல வெயில். பசி வேறு அவனுக்கு.

வெயிலில் வந்ததால் உள்ளே இருந்த குடத்தை கவனிக்காமல் கதவை திறந்து செல்ல குடம் தட்டுப்பட்டு விழுந்து விடுகிறான். இரண்டு குடம் தண்ணீரும் கொட்டி விடுகிறது.

அவனுக்கு மனைவி மீது கடுமையான கோபம் வந்து விடுகிறது. கொஞ்சமாவது இவளுக்கு அறிவு வேண்டாமா ? இப்படியா கதவுக்கு முன் தண்ணீர் குடத்தை வைப்பது? வரட்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே இன்னும் இரண்டு குடத்தோடு மெதுவாக வருகிறாள் மனைவி.

தூக்கி வந்த குடத்தைக் கூட இறக்க விடாமல் அவளைத் திட்டுகிறான். உன்னையெல்லாம் உங்கள் வீட்டில் எப்படித் தான் பெத்து, வளர்த்தாங்களோ! உனக்கெல்லாம் மூளையே இல்லையா? என கண்ட படி திட்டுகிறான்.

இதைக் கேட்ட அவளுக்கு கோபம் தலைக் கேறுகிறது. நான் எவ்வளவு கஷ்டப்பட்டு வாந்தி மயக்கத்தோட எவ்வளவு தூரத்திலிருந்து இந்த தண்ணிய கொண்டு வருகிறேன் தெரியுமா?

கண்ணை எங்க வச்சுக்கிட்டு போனிங்க என்று அவள் கேட்க, இப்படியே ஒருவருக்கொருவர் பேசி வார்த்தை பெரிதாகி, அவன் அவளை அறைந்து விடுகிறான்.

உடனே அவள் ‘இனி ஒரு நிமிடம் கூட உன் கூட நான் வாழ மாட்டேன் என்று சொல்லிவிட்டு வாயும் வயிறுமாக அவளின் அம்மா வீட்டுக்கு சென்று விடு கிறாள்.

இது கணவன், மனைவிக்குள் ஒரு சின்ன பிரச்சினை எவ்வளவு பெரிய முடிவை எடுக்க வைத்து விட்டது பார்த்தீர்களா?

அதுவே! இப்படி இருந்தால் அவன் குடம் தடுக்கி விழுந்து, தண்ணீரை கொட்டி விட்டான். உடனே அவனுக்கு தோன்றியது அடடா இப்படி கவனிக் காமல் இரண்டு குடம் தண்ணீரையும் கொட்டி விட்டோமே!


சே! பாவம் அவள். வயிற்றில் குழந்தையோடு தண்ணீர் எவ்வளவு தூரத்தில் இருந்து கொண்டு வருகிறாள்? முதல் வேலையா அவள் வந்தவுடன் மன்னிப்பு கேட்டு விட்டு நாமே போய் இரண்டு குடம் தண்ணீர் எடுத்து கொடுக்க வேண்டும் என நினைத்துக் கொண்டிருக்கும் போது அவள் தண் ணீரோடு வருகிறாள்.

இவன் ஓடிப் போய் அந்தக் குடங்களை இறக்கிய வாறு நடந்ததைச் சொல்லி, நான் கவ னிக்காமல் குடத்தின் மேல் விழுந்து தண் ணீரைக் கொட்டி விட்டேன். பாவம்! நீ எவ்வளவு தூரத்தில் இருந்து இந்த தண்ணீரைக் கொண்டு வருகிறாய் என்னை மன்னித்து விடு. கொடு நான் போய் தண்ணீர் கொண்டு வருகிறேன் என்கி றான்.

உடனே அவள் பதறுகிறாள். ஐயையோ விழுந்துட் டீங்களா? உங்களுக்கு ஒன்றும் ஆகலையே? தண்ணீர் போனால் போகட்டும் . நீங்கள் என்ன வேணும் என்றா கொட்டி விட்டீங்க! தெரியாமல் த்தானே! அங்க தண்ணிய வச்சது என் தப்பு. நான் போய் மெதுவா எடுத்துக் கொள்கிறேன்.

நீங்க வாங்க சாப்பிட. நல்ல பசியோடு வந்தி ருப்பீங்க பாவம் என்கிறாள்.

அவன் அப்படியே நெகிழ்ந்து போகிறான். அவள்மேல் அவனுக்கு இன்னும் அளவு கடந்த பாசம் உண்டாகிறது உள்ளுக்குள். இவ்வளவுதான் நம் வாழ்க்கையும்! கணவனோ, மனைவியோ தெரிந்து யாரும் தப்பு செய்வதில்லை. இருவரில் ஒருவர் ஒரு படி இறங்கினால், மற்றவர் கண்டிப்பாக பத்துப்படி இறங்கி வருவார். நம் வாழ்க்கையை நாம்தான் வள மாக்கி கொள்ள வேண்டும்.



## உனது நேரத்தில் உனது வேலையை திறம்பட செய்துவிடு...!

ஒருவன் 20 வயதில் திருமணம் செய்கி றான். ஆனால், 10 வருடங்கள் கழித்தே குழந்தை கிடைக்கிறது ...!

இன்னொருவன் 30 வயதில் திருமணம் செய்கிறான். 1 வருடத்தில் குழந்தை கிடைக் கிறது...!

ஒருவன் 22 வயதில் பல்கலைக்கழக பட்டதாரி ஆகிறான். ஆனால், 5 வருடங்க ளுக்குப் பின்பே தொழில் கிடைக்கிறது...!

இன்னொருவன் 27 வயதில் பட்டதாரி ஆகிறான். அடுத்த வருடமே தொழில் கிடைத்து விடுகிறது...!

ஒருவர் 25 வயதில் நிறுவனத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்கிறார். 45 வயதில் அவர் மரணித்து விடுகிறார்...!

இன்னொருவர் 50 வயதில் நிறு வனத்தில் தலைவர் ஆகிறார். 90 வயது வரை வாழ்ந்து விட்டு செல்கிறார்...!

நம்மால் புரிந்துகொள்ள சிரமமான இத்தகைய ஏற்பாடுகள் எல்லாம் வல்ல இறைவன் முன்பே கணித்து வைத் தவை.

எழுதுகோல்கள் தூக்கப்பட்டு விட்டன. ஏடுகளும் மடித்து வைக்கப்பட்டு விட்டன...!

அவனைப் போல் எனக்கில்லையே என்று நீ புலம்பும் அதே நேரத்தில், உன்னைப்போல் நான் இல்லையே என்று அவன் புலம்பிக் கொண்டிருப் பான். உனக்கு விதிக்கப்பட்டது வேறு..

அவனக்கு விதிக்கப்பட்டது வேறு.. ஆக, உனது நேரத்தில் உனது வேலையை திறம்பட செய்துவிடு...!

உனக்கு முன்னால் உள்ளவர்கள் முந்தி யவர்களும் அல்ல, உனக்குப் பின்னால் உள்ளவர்கள் பிந்தியவர்களும் அல்ல...! நீயும் யாரையும் முந்தவும் இல்லை, யாரையும் பிந்தவும் இல்லை...!

அந்த இறைவன் உனக்கென குறித்த நேரத்தில் நீ உனது பணியை செய்து கொண்டிருக்கின்றாய்! அவ்வளவே...!

ஆதலால், உனக்கென குறிக்கப்பட்ட நேரங்காலத்தை செவ்வனே பயன்படுத் திக்கொள்...!

## வாழ்க்கையில் கட்டாயம் சாதிக்கத்தான் வேண்டுமா?

சாதாரண வாழ்க்கை வாழ் வது என்ன அவ்வளவு பெரிய தெய்வகுற்றமா?

மனிதனாகப்பிறந்தால் சாதிக்க வேண்டும் , செய் அல் லது செத்து மடி. இந்த உலகம் சாதிப்பவரை தான் உற்று பார்க்கும். தோற்பவர்களை அல்ல. இப்படியெல்லாம் சொல்லி நம்மை ஒரு பரப்பரப் பான சூழ்நிலையிலேயே வைத்திருக்கிறார்கள். விசில் அடிச்சால் போதும் ஓட வேண் டியது தான் மிச்சம்.

போட்டி என்று வரும் பொழுது ஒருவரால்தான் ஜெயிக்க முடியும் நம் எல்லோ ருக்குமே இது தெரியும். அப் போது மற்றவர்கள் தோற்றுத் தானே போவார்கள் . தோற்றவர்களை எல்லாம் ஏமா ளிகள்என்றுசொல்வதற்காகவே போட்டிகள் நடத்தப்படுகின்றன.

எப்படி எல்லோராலும் ஜெயிக்க முடியும். அப்படி ஜெயித்தால் அந்த வெற்றியை இந்த உலகம் ஏற்க்குமா? ஏற் றத்தாழ்வில் தானே உலகமே இயங்கிக் கொண்டிருக்கிறது.

வாழ்க்கையில் சாதிப்பதன் அர்த்தம்என்ன . நிறைய பணம் சேர்த்து ஊரே பொறாமைப்படும் அளவுக்கு காசு, பணம் வந்துட் டால் அதற்கு பேர் தான் சாதனை யான வாழ்க்கையா?

அமைதியாக யார் வம்புக் கும் போகாமல், பதற்றப்படாமல் ஒரு வாழ்க்கை வாழ்ந்தால் அது சாதாரண வாழ்க்கையா?

அதில் என்ன சுவாரஸ்யம் இருக்கப்போகுது என்று கேட்கா தீர்கள்

இங்கே பிரச்சினை சாதா ரண வாழ்க்கையோ இல்லை சாதிக்கிற வாழ்க்கையோ இல்லை. அதை யார் முடிவு பண்ணுகிறார்கள் என்பதில் தான் இருக்கும் அழுத்தத்தினால் முடிவு பண்ணுவதற்கும் நாமே ஆசைப்பட்டு முடிவு பண்ணு வதற்கும் வித்தியாசம் இருக் கிறது. அப்படி யார் யாருக்கு எந்த வாழ்க்கை பிடிச்சிருக்கோ அப்படி வாழ்ந்துட்டு போங்கள் .



# புலமைப் பரிசில் பரீட்சை

சிறுகதை

**இரா.சிவலிங்கம்**

ரமேஸ் ஐந்தாம் வகுப்பில் படிக்கும் மாணவன். வகுப்பில் இருக்கும் சக மாணர்களிடம் நன்றாகப் பழகுவான். ரமேஸின் தாய், தந்தை, தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள். அவர்கள் குடும்பம் வறுமையில் வாடியது. இதனால் படிப்பதற்குத் தேவையான பாடசாலை உபகரணங்களை கூட வாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தனர்.

இருப்பினும் ரமேஸின் தாய் தன் மகனை படிக்க வைத்து ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற செய்ய வேண்டுமென உறுதியோடு இருந்தார். கல்வியை இடைநடுவில் விட்டுவிட்டு, சிறுவயதிலேயே திருமணம் செய்து கொண்ட தாய் தன் குடும்பம் தற்போது கஸ்டத்தில் இருப்பதை உணர்ந்தாள். தன் பிள்ளைகளையாவது படிக்க வைத்துவிட வேண்டும் என தினமும் கடவுளை வேண்டுவாள்.

ரமேசும் நன்றாகப் படிப்பான். வகுப்பு தலைவனும் அவன்தான். எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றி நிறைய பரிசில்களையும் பெற்றுள்ளான். தந்தை இரவில் குடித்துவிட்டு வந்து மனைவியிடம் வாக்குவாதப்படுவார். சில நாட்களில் ரமேசுக்கு படிக்க முடியாது. பக்கத்து வீடுகளில் ரேடியோ, டிவி மிக சத்தமாக இருக்கும். அந்த லயத்தில் ரமேஸ் மட்டும்தான் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சைக்குப் படிக்கப் போவான். ஏனைய பிள்ளைகளை சரியான வயதில் பாடசாலையில் சேர்க்காததால் வயது கூட என்று நிறுத்தி விட்டார்கள்.

தாய் இரவில் தன்னுடைய வேலை களைப்பையும் பொருட்படுத்தாமல் தன் மகனுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பாள். சிறுக சிறுக சேமித்து தன் மகனின் படிப்பிற்காக செலவு செய்வாள். கணவன் குடித்து அழிக்கும் பணத்தை மகன் படிப்பிற்கு செலவு செய்ய வேண்டும் என அடிக்கடி கணவனுடன் சண்டைப் போட்டு பலமுறை அடியும் வாங்கி இருக்கிறாள்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தினமும் வந்தது. ரமேசின் தாய் எல்லா கோயில்களுக்கும் சென்று நேர்த்திக் கடன் வைத்தாள். ரமேசை அழைத்துச் சென்று படிப்பித்த ஆசிரியர்கள், பெரியோர்களிடம் ஆசி வாங்கினாள். எல்லோருடைய ஆசியும் ரமேசுக்கு கிடைத்தது. மிக சந்தோசமாக ரமேஸ் பரீட்சைக்கு சென்றான்.

அன்றைய தினம் தாய் வேலைக்கு செல்லவில்லை. தன் மகனை பரீட்சைக்கு அழைத்துச் சென்றாள். ரமேசுக்கு படிப்பித்த ஆசிரியர்கள் அவனை உற்சாகப்படுத்தினார்கள். பரீட்சை முடியும் வரை தாய் வெளியில் இருந்தாள். தன் மகன் பரீட்சையை நன்றாக செய்ய வேண்டும் என ஒவ்வொரு விநாடியும் தியானித்து கொண்டாள். தன் வகுப்பில் படித்தவர்கள் எல்லாம் மிக உயர்ந்த பதவியில் இருப்பதை அன்று அறிந்து கொண்ட பின் தன் செயல்களை எண்ணி மனம் வருந்தினாள். பரீட்சை முடிவடைந்து மகன் மிகவும் சந்தோசமாக வெளியே வருவதைப் பார்த்த தாய் ஓடிச் சென்று அவனைத் தூக்கி முத்தமிட்டாள். கையில் இருந்த ரோல்சையும், குளிர் பானத்தையும் கொடுத்தாள்.

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியானது. அந்த பாடசாலையிலேயே ரமேஸ் நூற்றி தொண்ணூறு புள்ளிகளைப் பெற்று அந்த கல்வி வலயத்திலேயே முதல் மாணவனாக வந்திருந்தான். இதனைக் கேள்விப்பட்ட தாய் தன் மகனை கட்டியணைத்து ஆனந்தக் கண்ணீர் விட்டாள். எதையோ வாழ்க்கையில் சாதித்து விட்டது போல் உணர்ந்தாள். மறுநாள் ரமேசின் பாடசாலையில் அந்த தோட்டத்து மக்களால் பெரும் பாராட்டு விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த நிகழ்வுக்கு தோட்டத் துரை, அதிபர், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள், நலன் விரும்பிகள், தோட்டத்து பொது மக்கள், தோட்டத் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் உரையாற்றி அனைவரும் ரமேசின் சாதனையைப் பாராட்டி பேசினார்கள். மற்றும் பரிசில்களை வழங்கி கௌரவித்தார்கள். இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த தாய் ஆனந்தத்தின் உச்சிக்கே சென்று விட்டாள்.

இந் நிகழ்வில் ரமேசின் பெற்றோருக்கு விசேட பரிசு ஒன்றை அதிபர் வழங்கி கௌரவித்தார். பெற்றோர்கள் அனைவரும் இவ்வாறு தன்னுடைய பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையில் அக்கறையும், ஆர்வமும் காட்ட வேண்டும் என உரையாற்றினார். இதைக் கேட்ட ரமேசின் தந்தை கண்ணீர் மல்கிட, இனி குடிக்க மாட்டேன். உன் படிப்புத்தான் முக்கியம். என ரமேசின் காதில் சொல்லியது, தாய்க்கு விளங்கியது. தன் மகனை ஒரு பட்டதாரியாக உருவாக்க வேண்டும் என இருவரும் கதைத்துக் கொண்டு வீட்டை நோக்கிச் சென்றார்கள்.

(யாவும் கற்பனையல்ல)

# பூமியை அச்சுறுத்தும் ......

விஞ்ஞானத் தொழில்நுட்ப அறிவையும் உள்நாட்டு மற்றும் பூர்வீக அறிவையும், ஒன்றிணைப்பதன் மூலம் எட்டப்படும் தீர்வுகள் மிகவும் பயனுள்ளவையாகவும் வினைத்திறனானவையாகவும் இருக்கும்.

காலநிலைக்கு மீள்தன்மையுடைய மற்றும் நிலையான வளர்ச்சி என்பவற்றை அடைவதில் ஏற்படும் தோல்வியானது மக்களிற்கும் இயற்கைக்கும் நிச்சயமற்ற எதிர்காலத்தையே வழங்குகின்றது. பாதிக்கு மேல் உலக மக்கள் வாழ்கின்ற நகரங்களின் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகள், அபாயங்கள் மற்றும் இசைவாக்கங்கள் என்பன பற்றிய தகவல்கள் பற்றிய விரிவான மதிப்பீடுகளை இந்த அறிக்கை வழங்குகிறது.

மக்களின் ஆரோக்கியம், வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்கள், அத்துடன் சொத்து மற்றும் சக்தி போக்குவரத்து தொகுதிகள் உட்பட முக்கியமான உள்கட்டமைப்புக்கள், வெப்ப அலைகள், புயல்கள், வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற பெருகிய முறையில் பாதகத்தை ஏற்படுத்தும் ஆபத்துகளாலும் கடல் மட்ட உயர்வு போன்ற மெதுவாக தொடங்கும் மாற்றங்களாலும் பாதிக்கப்படுகின்றன.

‘குறிப்பாக ஏற்கனவே மோசமாக திட்டமிடப்பட்ட நகர்ப்புற வளர்ச்சி, அதிகளவு வறுமை, வேலையின்மை மற்றும் அடிப்படை சேவைகளுக்கான பற்றாக்குறையுடைய இந்த நகரங்களுக்கு, ஒன்றாக வளர்ந்து வரும் நகரமயமாக்கல் மற்றும் காலநிலை மாற்றம் என்பன சிக்கலான அபாயங்களை ஏற்படுத்துகின்றன’ என்று டெப்ரா ராபர்ட்ஸ் கூறினார். ‘ஆனால் நகரங்களும் காலநிலை நடவடிக்கைக்கான வாய்ப்புகளை வழங்குகின்றன. பசுமை கட்டடங்கள், நம்பகமான சுத்தமான நீர் விநியோகம் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் நகர்ப்புறத்தையும் கிராமப்புற பகுதிகளையும் இணைக்கும் நிலையான போக்குவரத்து தொகுதிகள் அனைத்தும் நியாயமான சமூகம் ஒன்றிற்கு வழிவகுக்கும்.’

பொருத்தமற்ற திட்டமிடலின் விளைவுகள் ஏற்படுத்திய இசைவாக்கத்திற்கான சான்றுகள் அதிகரித்து வருகின்றன. எடுத்துக்காட்டாக இயற்கையை அழித்தல், ஆபத்தான மக்களின் வாழ்க்கை அல்லது அதிகரித்த பச்சைவீட்டு வாயுக்களின் உமிழ்வுகள். அனைவரையும் திட்டமிடலில் ஈடுபடுத்துதல், சமத்துவம் மற்றும் நீதியை கவனத்திற் கொள்ளல் மற்றும் உள்நாட்டு மற்றும் பூர்வீக அறிவு என்பவற்றின் மூலம் இவற்றைத் தவிர்க்கலாம்.

## எதிர்கால நடவடிக்கைகள்

காலநிலை மாற்றமானது உலகளாவிய சவாலாக உள்ளது. அதற்கு உள்ளூர் தீர்வுகளே தேவை. அதனால்தான் காலநிலைக்கு உகந்த முன்னேற்றத்தை Climate Resilient Development - CRD) செயல்படுத்த விரிவான பிராந்திய தகவல்களை IPCC இன் ஆறாவது மதிப்பீட்டு அறிக்கைக்கு (AR6) பணிக்குழு II ஆனது பங்களிப்பு வழங்குகிறது.

தற்போதைய வெப்பமயமாதல் நிலைகள் ஏற்கனவே சவாலாக உள்ளதாக காலநிலைக்கு உகந்த முன்னேற்றத்திற்கான (CRD) அறிக்கை தெளிவாக கூறுகிறது. புவி வெப்பமடைதல் 1.5°C (2.7°F) அதிகமாக இருந்தால் அது மேலும் எல்லைப்படுத்தப்பட்டு விடும். சில பிராந்தியங்களில் புவி வெப்பமடைதல் 2°C (3.6°F) ஐ விட அதிகமாக உள்ளது. எனவே அது சாத்தியமற்றது. இந்த முக்கிய கண்டுபிடிப்பு காலநிலைக்கான செயலின் அவசரத்தையும் சமமான மற்றும் நீதியில் கவனம் செலுத்துதலையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. போதுமான நிதி, தொழில்நுட்ப பரிமாற்றம், அரசியல் அர்ப்பணிப்பு மற்றும் கூட்டாண்மை மிகவும் பயனுள்ள காலநிலை மாற்றத்திற்கான இசைவாக்கத்திற்கும் உமிழ்வுகளின் குறைப்புகளிற்கும் வழிவகுக்கும்.

‘அறிவியல் சான்றுகள் சந்தேகத்திற்கு இடமின்றி உள்ளன. பருவநிலை மாற்றம் மனித நல்வாழ்வு மற்றும் ஆரோக்கியத்திற்கும் பூமிக்கும் அச்சுறுத்தலாக உள்ளன. ஒருங்கிணைந்த உலகளாவிய நடவடிக்கையில் மேலும் ஏற்படுத்தும் தாமதமானது, வாழக்கூடிய உயிர் ஒன்றின் எதிர்காலத்தைப் பாதுகாக்க தவறவிடும் சுருக்கமான மற்றும் விரைவாக மூடும் ஒரு ஜன்னல்’ என்று ஹான்ஸ் ஓட்டோ போர்ட்னர் கூறினார்.

## விவசாயத்தில் காலநிலையின் பாதிப்புகள்

காலநிலை மாற்றத்தின் தீவிர பாதிப்புகளால் விவசாயத்தின் சவால் தீவிரமடைந்துள்ளது. அதிகரித்து வரும் வெப்பநிலைகள், வானிலை மாறுபாடுகள், விவசாயச் சுற்றுச்சூழலின் எல்லைகளை மாற்றுவது, ஆக்கிரமிப்பு பயிர்கள் மற்றும் பூச்சிகள் மற்றும் அடிக்கடி ஏற்படும் தீவிர வானிலை நிகழ்வுகள் போன்ற வடிவங்களில் பருவநிலை மாற்றத்தின் எதிர்மறையான தாக்கங்கள், ஏற்கனவே உணரப்படுகின்றன. காலநிலை மாற்றமானது, பண்ணைகளில் பயிர் விளைச்சலைக் குறைக்கிறது, முக்கிய தானியங்களின் ஊட்டச்சத்து, தரம் மற்றும் கால்நடை உற்பத்தியைக் குறைக்கிறது. தற்போதைய விளைச்சலைத் தக்கவைக்கவும், தேவையைப் பூர்த்தி செய்து உற்பத்தி மற்றும் உணவுத் தரத்தை அதிகரிக்கவும் இசைவாக்கத்திற்கான கணிசமான முதலீடுகள் தேவைப்படும்.

## கொள்கைப் பரிந்துரைகள்

பொது ஆராய்ச்சியில் முதலீடு செய்தல்:- பொது நிதியுதவியுடன் கூடிய ஆராய்ச்சியானது விவசாயிகளுக்கு திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிக்க தேவையான கருவிகள் மற்றும் தகவல்களை வழங்குகிறது. காலநிலை மாற்றத்துடன், விவசாயிகளுக்கு முன்னெப்போதையும் விட விஞ்ஞானம் அதிகம் தேவைப்படுகிறது, இருப்பினும் அவர்கள் சமாளிக்க உதவும் ஆராய்ச்சிக்கான பொது நிதி பற்றாக்குறையாக உள்ளது. விவசாய சூழலியல் ஆராய்ச்சி ஆனது நீண்ட கால, உண்மையில் வேர் - ஆழமான தீர்வுகளை உருவாக்குகிறது, இது விவசாயம் தலைமுறைகளுக்கு சாத்தியமானதாக இருக்க உதவும் - குறிப்பாக நிதி குறைவாக உள்ளது.

பாதுகாப்புத் திட்டங்களை விரிவுபடுத்தல் - இது விவசாயிகள் தங்கள் பண்ணைகளை அதிக காலநிலை - எதிர்ப்புத் தன்மை கொண்ட நிலையான நடைமுறைகளை பின்பற்றுவதை எளிதாக்குகிறது. அவர்களின் நிதி மற்றும் அவற்றின் தாக்கத்தை நாம் அதிகரிக்க வேண்டும்.

பாதுகாப்பு வலைகளை வலுப்படுத்துதல் - அறிவியல் மற்றும் முன்னோக்கு கொள்கை என்ன செய்ய முடியும் என்பதைப் பொருட்படுத்தாமல், நாடு முழுவதும் உள்ள பண்ணைகள் சவாலுக்கு உட்படுத்தப்படும். விவசாயக் குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு காலநிலை நெருக்கடியிலிருந்து தப்பிக்கவும், மேலும் மீள்வதற்கு தேவையான ஆதரவை வழங்குவது அவசியம். இதில் சிறந்த பயிர்க் காப்பீட்டுத் திட்டங்கள், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கான சுகாதாரப் பாதுகாப்பு அணுகல் மற்றும் பயனுள்ள, பதிலளிக்கக்கூடிய பேரிடர் நிவாரணத் திட்டங்கள் ஆகியவை அடங்கும்.

நிகர பூச்சிய உமிழ்வை அடைதல்: நமது காலநிலை உமிழ்வை வெகுவாகக் குறைப்பதற்கும், விரைவில் நிகர பூச்சியத்தை அடைவதற்கான வாய்ப்பை வழங்குவதற்கும் கொள்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

# அடுத்தவர் எண்ணங்களுக்கும் மூளைக்கும் இடமளிக்காது

இந்த வாரம் இவர்

## எலான் மஸ்க்

ப்ரியமதா பயஸ்



உலகின்முதலாவது பணக்காரராக உருவெடுத்துள்ளார் 49 வயதான எலான் மஸ்க்.

இன்றைய நாளுக்கு அவருடைய சொத்து மதிப்பு சுமார் 202 பில்லியன் அமெரிக்க டொலர். இவர் உலகின் பணக்காரராக மட்டுமல்ல உலக மக்களின் ஒரு ஹீரோவாகவும் மாறி இருக்கிறார் .

1971 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 28 ஆம் திகதி அன்று தென்னாப்பிரிக்காவின் பிரிட்டோரியாவில் பிறந்தவர்தான் எலான் மஸ்க். அவரது அப்பா எர்ரால் மஸ்க் தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்தவர். எலக்ட்ரோனிக்கல் பொறியியலாளர், விமானி, கப்பலோட்டி என சகலகலா வல்லவன். அவரது அம்மா மேயா மஸ்க் கனடாவில் பிறந்து, தென்னாபிரிக்காவில் வளர்ந்தவர். மொடல் அழகி மற்றும் டயட்டிஷியனாக பணியாற்றியவர். மஸ்க்கிற்கு கிம்பல் என்ற தம்பியும், டோஸ்க்கா என்ற தங்கையும் இருக்கிறார்கள் . தென்னாப்பிரிக்கா, கனடா மற்றும் அமெரிக்க குடியுரிமையை பெற்றுள்ளவர் மஸ்க். அவரது முன்னோர்கள் சிலர் டச்சு மற்றும் பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்தவர்களாகவும் இருந்துள்ளனர்.

மஸ்க்கிற்கு ஒன்பது வயதாக இருந்த போதே மஸ்கின் பெற்றோர்கள் பரஸ்பர விவாகரத்து செய்து கொண்டனர். அதனால் அப்பாவின் அரவணைப்பில் இருந்த மஸ்கிற்கு அந்த நாள்கள் மிகவும் கொடுமையானதாக இருந்துள்ளன.

இருப்பினும் பத்து வயதிலேயே கணினியில் ஆர்வம் காட்டிட ஆரம்பித்தார் மஸ்க். Commodore VIC - 20 கம்யூட்டரை தான் மஸ்க் முதன்முதலில் பயன்படுத்தினர். ஒரு மனுவலை பயன்படுத்தி கணனி புரோகிராமிங் துணையோடு பிளாஸ்டர் டு PC என்ற வீடியோ கேமை வடிவமைத்துள்ளார் மஸ்க். அதை சுமார் 500 அமெரிக்க டொலருக்கு விற்பனையும் செய்துள்ளார்.

இந்த சாதனையை செய்யும்போது அவருக்கு பன்னிரண்டு வயதுதான் . தென்னாப்பிரிக்காவில் படிப்பை முடித்ததும் மேற்படிப்புக்காக அமெரிக்கா செல்ல இருந்தார் மஸ்க். இருப்பினும் அம்மாவின் குடியுரிமையை பயன்படுத்தி கனடா சென்ற அவர் அங்கு பொருளாதாரம் மற்றும் இயற்பியலில் இளங்கலை பட்டம் முடித்தார். இடைப்பட்ட காலத்தில் தோட்டத்திலும் பணியாற்றியுள்ளார். அமெரிக்காவின் சிலிக்கன் வேலியில் இன்டெர்ன்ஷிப்புக்காக பினாக்கல் ஆய்வு கூடத்திலும், ரொக்கெட் சயன்ஸ் கேம்ஸ் ஸ்டார்ட் அப்பிலும் மஸ்க் பணி அனுபவம் பெற்றுள்ளார்.

தொடர்ந்து நெட்ஸ்கப் நிறுவனத்தில் வேலைக்காகவும் முயற்சித்துள்ளார். அவரது முயற்சிக்கு பலன் கிடைக்காத நிலையில் 1995இல் தன் சகோதரர் கிம்பல் மற்றும் கிரெக் என்றவருடன் இணைந்து ZIP2 என்ற நிறுவனத்தை நிறுவினார். செய்தித்தாள்கள் அச்சிடும் நிறுவனங்களுக்கு நகரின் ரூட் மப், போகும் வழிகள் மற்றும் தொலைபேசி எண்களை இணையத்தின் உதவியோடு கட்டமைத்து அவர்களுக்கு உதவுவதுதான் ZIP2வின் பணி. அந்த முயற்சி வெற்றி பெறும் வரை மஸ்க் கலிபோர்னியாவில் இருந்த அலுவலகத்திலேயே தங்கி பணியாற்றியுள்ளார்.

வாடகை வீட்டில் கூட தங்க வசதியில்லாது ஒரு கணினியுடன் அந்த அலுவலகம் அப்போது இயங்கியுள்ளது. பகல் நேரத்தில் வெப்சைட் செயலில் இருக்குமாம். இரவு நேரத்தில் மஸ்க் அதில் கோடிங் செய்வது வாடிக்கையாம். நியூயோர்க் டைம்ஸ் மாதிரியான நாளிதழ்கள் நிறுவனம் மஸ்கின் உதவியை நாடி வளர்ந்துள்ளது. இருப்பினும் 1999இல் வேறொரு நிறுவனத்திடம் ஒப்படைத்ததன் மூலம் மஸ்கிற்கு 2.2 கோடி அமெரிக்க டொலர் கிடைத்துள்ளன.

தொடர்ந்து அதில் கிடைத்த தொகையில் 10 மில்லியன் டொலரை கொண்டு X.com நிறுவனத்தை சிலருடன் இணைந்து 1999இல் நிறுவியுள்ளார் மஸ்க். ஒன்லைன் மூலமாக நிதி சேவை வழங்குவது தான் இந்நிறுவனத்தின் பணி. ஓராண்டுக்கு பிறகு பேபால் நிறுவனத்துடன் அதை இணைத்தார் மஸ்க். அதே சமயத்தில் 2002 இல் மலிவு விலை ரொக்கெட்டுகளை உருவாக்கும் நோக்கில் ஸ்பேஸ் யீ நிறுவனத்தை மஸ்க் 10 கோடி அமெரிக்க டொலர்களை முதலிட்டு தொடங்கியிருந்தார். அதே ஆண்டில் ஒக்ரோபர் மாதம் பேபால் நிறுவனத்தை ஈ பேயிடம் கொடுத்ததன் மூலம் 16.5 கோடி அமெரிக்க டொலர்களை ஈட்டியிருந் தார்.

2004 இல் டெஸ்லா குழுமத்தில் இணைந்தார். அந்த காலகட்டத்தில் அதிகம் முதலீடுகளில் கவனம் செலுத்தி வந்தார் மஸ்க். அமெரிக்காவில் சோலர் மின்சாரம் வழங்கி வரும் சோலர் சிட்டி நிறுவனத்தை உறவினர்களுடன் இணைந்து 2006இல் நிறுவினார். 2008இல் டெஸ்லாவின் தலைமை செயல் அதிகாரியாக உயர்ந்தார்.

ஸ்பேஸ்யீ நிறுவனத்திற்கு 2011இல் நாசாவின் ஆதரவுடன் விண்வெளியில் சாத்தியம் இல்லை என சொன்னதை சாத்தியமாக்கினார். கடந்த 2020 இல் தனியார் நிறுவனமான ஸ்பேஸ்யீ 'டெமோ2' மூலமாக மனிதனை விண்ணுக்கு அனுப்பி சாதனை படைத்தார் மஸ்க். 2015இல் ஓபன் AI நிறுவனத் தையும் நிறுவினார்.

2016இல் மனித மூளையை இயந்திரத்துடன் இணைக்கும் நியூராலிங் மற்றும் குகைகளை அமைக்கும் தி போரிங் கம்பனியையும் நிறுவினார். மூன்று முறை திருமணம் செய்து கொண்டு விவாகரத்தானவர் மஸ்க்.

அயர்ன் மேன்2 உட்பட சில ஹாலிவுட் படங்களில் கௌரவ தோற்றத்தில் மஸ்க் நடித்துள்ளார்.

இப்படி பல்வேறு தொழில் மற்றும் முதலீடுகளின் மூலமாக தற்போது 202 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிபதியாகவும், உலகின் நம்பர் வன் பணக்காரராகவும் மஸ்க் வளர்ந்துள்ளார்.

ராசிபுரத்தில் ஒரு முதலாளி. ஆள் மழைக்கு கூட பள்ளிக்கு ஒதுங்கவில்லை. ஆனால் அவர் போகாத உலகநாடுகள் இல்லை.

1970 களிலேயே கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய்க்கு இயந்திரங்கள் இறக்குமதி செய்தவர்.

ஆஸ்திரேலியாவில் இருக்கும் வன உயிரியல் பூங்காவில் அதன் நுழைவாயில் போலவே தனது சொந்த வீட்டிற்குக் கதவு அமைப்பதற்காக நேரில் சென்று பார்த்து படம் எடுத்து வந்தவர் மஸ்க் .

அவரிடம் பேசிக்கொண்டிருந்த போது ஒருமுறை கூறினாராம் .


நான் சொல்வதை நீ செய் (DO WHAT I SAY ) என்று சொல்லக்கூடாது. செய் (DO IT) என்று சொல்லவேண்டும் என்றாராம் .

நாம் ஒருவரை வேலை வாங்குவதை கூட அதன் வார்த்தையை கட்டளையாக மாற்றுவதன் மூலம் அழுத்தத்தை அதிகரிக்க வேண்டும் என்று கூறுவார்.

எலான் மஸ்க்கும் அதே போலத்தான். அவர் சொல்வதை மட்டுமே அடுத்தவரை செயல்படுத்த வேண்டும்.

அவருக்கு அடுத்தவர் சொல்வது பிடிக்காது. மீட்டிங் போடுவதும் பிடிக்காது. இன்னும் சொல்லப்போனால் அவரது வட்டாரத்தில் பணியாளர்கள் சென்ட் போடுவது கூட பிடிக்காது.

சுருக்கமாகச் சொன்னால் அவர் ஒரு வழிப்பாதைகாரன் அடுத்தவர் எண்ணங்களுக்கும், மூளைக்கும் அங்கே இடமில்லை.



# ரஷ்யா - உக்ரைன் இடையே அமைதியை ஏற்படுத்த திருத்தந்தை பிரான்சிஸ் முயற்சி

* ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகள் அன்னை மரியாவின் இதயத்திற்கு அர்ப்பணிப்பு
* போரில் ஈடுபட்டுள்ள இந்நாடுகளுக்கும் செபிக்க உலக ஆயர்களுக்கு கடித அழைப்பு
* தொலைபேசியில் உக்ரைன் அரசுத் தலைவர் உடன் உரையாடல்
* உக்ரைன் அரசுத் தலைவரை இத்தாலிய நாடாளுமன்றத்தில் உரையாற்ற அழைப்பு
* உக்ரைன் போரால் பாதிக்கப்பட்டு உரோம் குழந்தை இயேசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் குழந்தைகளுடன் சந்திப்பு

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)



### ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளை மரியாவின் இதயத்திற்கு அர்ப்பணிப்பு

மரியாவுக்கு இயேசு பிறப்பு அறிவிக்கப்பட்ட திருநாளாகிய 25 மார்ச் அன்று மனித சமுதாயத்தை குறிப்பாக ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளை மரியாவின் களங்கமற்ற இதயத்திற்கு அர்ப்பணித்து அமைதியின் அரசியாம் அன்னை மரியா அமைதியைப் பெறுவதற்கு உதவுவார் என்ற நம்பிக்கையோடு 25 மார்ச் 2022 அன்று எல்லாக் கத்தோலிக்கதிரு அவையுடன் இணைந்து திருத்தந்தை செபித்தார்.

இந்த அர்ப்பணிப்பு நிகழ்வின்போது முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களும் தான் தங்கியிருக்கும் இல்லத்திலிருந்தே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களோடு ஒன்றிணைந்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளை மரியாவின் இதயத்திற்கு அர்ப்பணித்து 25 மார்ச் 2022 அன்று செபிக்க உலக ஆயர்களுக்குத் திருத்தந்தை கடிதம் அனுப்பியிருந்தார்.

25 மார்ச் 2022 அன்று உலகக் கத்தோலிக்க திரு அவை இணைந்து ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளில் அமைதி நிலவ மரியாவின் இதயத்திற்கு ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளை அர்ப்பணித்துச் செபித்தது.

இந்த அர்ப்பணிப்புச் செபத்தின் முக்கிய பகுதி இதுவாகும்:–

"... இறைவனின் அன்னையும் எங்களின் தாயுமான உமது மாசற்ற இதயத்திற்கு எங்களையும் திரு அவையையும் அனைத்து மனித குலத்தையும் குறிப்பாக உக்ரைன், ரஷ்ய நாடுகளையும் நாங்கள் நம்பிக்கையுடன் அர்ப்பணிக்கிறோம்.

"அன்புடனும் நம்பிக்கையுடனும் நாங்கள் மேற்கொள்ளும் இந்தச் செயலை ஏற்றருளும். போர் முடிவடைந்து உலகம் முழுவதும் அமைதி பரவச் செய்தருளும். முழு மனித குடும்பத்தின் எதிர்காலத்தையும் ஒவ்வொரு மனிதரின் தேவைகளையும் எதிர்பார்ப்புக்களையும் உலகின் கவலைகளையும் நம்பிக்கைகளையும் உமது மாசற்ற இதயத்திற்து நாங்கள் அர்ப்பணிக்கிறோம்." என்று அமைந்தது.

### உலக ஆயர்களுக்குத் திருத்தந்தை கடிதம்

உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளை அன்னை மரியாவின் மாசற்ற திருஇதயத்திற்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு தொடர்பாகக் கடிதம் ஒன்றை 23 மார்ச் 2022 அன்று எழுதியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அக்கடிதத்தில் திருத்தந்தை –

கடந்த ஒரு மாத காலமாக உக்ரைனில் நடந்துவரும் போர் அம்மக்களைப் பெரும் துயரத்திற்கு ஆளாக்கி வருகிறது. இருள் சூழ்ந்துள்ள இந்நேரத்தில் அமைதியின் அரசியாம் அன்னை மரியாவின் பரிந்துரையையும் அவரது தாய்மைத்துவ நெருக்கத்தையும் நாடித் தேடவேண்டிய அவசரத்தில் திருஅவை உள்ளது. துயருறும் எண்ணற்ற மக்களின் விண்ணப்பங்களுக்குப் பதிலளிக்கும் விதமாக 20 மார்ச் 2022 அன்று ஞாயிறு மூவேளை செப உரையின் இறுதியில் நான் குறிப்பிட்டது போன்று 25 மார்ச் 2022 அன்று உக்ரைன் மற்றும் ரஷ்யா நாடுகளை அன்னை மரியாவின் மாசற்ற திருஇதயத்திற்கு அர்ப்பணிக்கும் நிகழ்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

கடவுள் வழங்கிய மன்னிப்பினால் புதுப்பிக்கப்பட்ட இதயங்களுடன் நாம் அமைதிக்காக வேண்டுவது பொருத்தமானது என்பதால் புனித பேதுருவின் பெருங்கோவிலில் உரோம் நேரப்படி மாலை 5:00 மணிக்கு நடைபெறும் மன்னிப்பு வழிபாட்டில் அந்நாடுகளை அன்னை மரியாவின் மாசற்ற திருஇதயத்திற்கு அர்ப்பணிக்கும் திருச்சடங்கு தொடங்கும். இது மலை 6.30 மணிவரை தொடர்ந்து நடைபெறும்

மக்களின் பெரும் துயரங்களையும் அழுகுரல்களையும் அன்னை மரியாவிடம் அர்ப்பணித்து இவ்வுலகின் எதிர்காலத்தை அவரது பொறுப்பிலும் பாதுகாவலிலும் ஒப்புக்கொடுப்போம். இந்நிகழ்வில் அருள்பணியாளர்கள் இருபால் துறவியர் மற்றும் பொதுநிலை விசுவாசிகள் அனைவரையும் ஆர்வமுடன் பங்கெடுக்கத் தூண்டுங்கள். – ஆயர்களை மேலும் வலியுறுத்தியுள்ளார்.

### உக்ரைன் அரசுத் தலைவர் உரை

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் தொலைபேசியில் உரையாடிய பின்னர் உக்ரைன் நாட்டு அரசுத் தலைவர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி 22 மார்ச் 2022 அன்று காலை இத்தாலிய நாடாளுமன்றத்தில் காணொலி இணைப்பு மூலம் உரையாற்றினார். இந்த உரையில் உக்ரைன் நாட்டு அரசுத் தலைவர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுடன் தான் நடத்திய தொலைபேசி உரையாடலைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

20 மார்ச் 2022 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் உக்ரைனில் நடைபெற்றுவரும் போரை மனிதாபிமானமற்றது மற்றும் தெய்வக் குற்றமான செயல் என்றும் வரையறுத்த நிலையில் இந்த உரையாடல் நடைபெற்றுள்ளது.

இத்தாலிய நாடாளுமன்றத்துடன் காணொலித் தொடர்பில் உரையாற்றிய ஜெலென்ஸ்கி தனது நாடு ரஷ்யாவுடனான போரில் தப்பிப்பிழைக்கும் விளிம்பில் இருப்பதாகவும் மேலும் கிரெம்ளின் மீது அதிகமான தடைகள் விதிக்கப்படவேண்டும் என்றும் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்தார்.

தன்னைப் பொறுத்தவரை தீமையைக் கண்டு அதனை எதிர்க்கும் நோக்கில் உக்ரேனிய மக்கள் ஒரு இராணுவமாகவே மாறிவிட்டனர் எனவும், உக்ரைனில் நிலவிவரும் தற்போதையச் சூழல் பற்றியும் ரஷ்யாவின் தாக்குதல்களிலிருந்து தங்களை எப்படித் தற்காத்துக் கொள்வது என்பது குறித்தும் திருத்தந்தையிடம் தொலைப்பேசியில் உரையாடினார் என ஜெலென்ஸ்கி கூறினார்.

மனிதத் துயரங்களை முடிவுக்குக் கொண்டு வருவதில் திருத்தந்தையின் இடைநிலையாளர் பங்கு மிகவும் பாராட்டத்தக்கதாய் உள்ளதாகவும், உக்ரைனின் அமைதிக்காக அவர் எழுப்பிவரும் இறைவேண்டல்களுக்காகத் தான் நன்றி கூறினோர் எனவும் ஜெலென்ஸ்கி தெரிவித்தார்.

### உக்ரைன் போரால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுடன் திருத்தந்தை

உக்ரைன் போரால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் மனரீதியான மற்றும் உடல் ரீதியான சிகிச் சைகளை இலவசமாக வழங்கிவரும் உரோம் நகரின் குழந்தை இயேசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவரும் சிறார்களை 19 மார்ச் 2022 அன்று சந் தித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் உக்ரைன் குழந்தைகளையும் ஏனைய குழந்தைகளையும் அவர்கள் சிகிச்சை பெற்றுவரும் அறைகளுக்கே சென்று சந்தித்து ஆறுதல் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அவர்களோடு பணியாற்றிவரும் மருத்துவர்களுக்குத் தன் நன்றியையும் வெளியிட்டார்.

வத்திக்கான் நிதியுதவியுடன் இயங்கிவரும் இம்மருத்துவமனை இனம், மதம், மொழி, நாடு என்ற எவ்வித பாகுபாடுமின்றி அனைத்துக் குழந்தைகளுக்கும் குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் மனரீதியான மற்றும் உடல் ரீதியான சிகிச்சைகளை இலவசமாக வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.




காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்

### போர் ஒரு படுகொலை ஆனால் நல்லெண்ணத்தால் அமைதி சாத்தியம்

22 மார்ச் 2022 அன்று உரோம் நகருக்கு வெளியே உள்ள இத்தாலிய நகரமான பாசோஸ்கூரோவில் புதிய நோய்த்தடுப்பு சிகிச்சை மையம் ஒன்றை திருப்பீடச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் திறந்து வைத்தபோது 'போர் ஒரு படுகொலை ஆனால் நல்லெண்ணத்தால் அமைதி சாத்தியமாகும்' – என்றார்.

தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய கர்தினால் பரோலின் அவர்கள் உக்ரேனிய குழந்தைகளை இத்தாலிக்கு அழைத்து வந்துள்ள இச்சூழ்நிலை உண்மையில் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும், போருக்கான விலையை செலுத்துவது மக்களே, அதிலும் குறிப்பாக பலவீனமான மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களே என்றும், தன் வருத்தத்தை வெளிப்படுத்தினார்.

ஏறத்தாழ ஒரு மாத காலமாக நடைபெற்று வரும் இந்தப் போர் ஒரு 'படுகொலை' என்று கண்டனம் தெரிவித்த கர்தினால் பரோலின் அவர்கள் இந்தப் போர் நிச்சயம் ஒரு முடிவுக்கு வரும் என்று தான் நம்புகிறேன் எனவும் முதலில் போரை நிறுத்துவதில் நாம் வெற்றி பெறுவோம், பின்னர் ஒரு தீர்வுக்கு வழிவகுக்கும் பேச்சுகளைத் தொடங்கு வோம் என்றும் தெரிவித்தார்.

அனைவருக்கும் மாண்பினை அளிக்கும் ஒரு தீர்வைக் கண்டுபிடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் எப்போதும் உள்ளன என்றும், அவ்வாறு செய்ய நல்ல விருப்பம் இருந்தாலே போதுமானது என்றும் மேலும் கூறினார்.

திருத்தந்தை தற்போது சுமுகமான பேச்சு ஒன்றை வலியுறுத்து கிறார் என்றும் இரண்டு குழுக்களுக்கிடையே இடைநிலையாளராக இருந்து பேச்சு வழியாகப் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்குத் திருப்பீடம் எப்போதும் உதவத் தயாராக இருப்பதாகவும் கர்தினால் பரோலின் தெரிவித்தார்.

# ஈ.பி.டி.பி. வலியுறுத்தும் நிலைப்பாடுகள் சரி என்பதைக் காலம் நிருபிக்கின்றது!

## டக்ளஸ் தேவானந்தா பெருமிதம்



அரசியல் அரங்கில் ஈ.பி.டிபி. தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலைப்பாடுகள் சரியானவை என்பது நிரூபிக்கப்பட்டு வருகின்றது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதன் மூலம் மாகாணசபை முறைமையை முழுமையாக அமுல்படுத்துவதை ஆரம்பமாகக் கொண்டு, எமது மக்களின் அபிலாகைகளை நிறைவேற்ற முடியும் என்று ஈ.பி.டி.பி. வலியுறுத்தி வருகின்ற நிலையில், ஏனைய தமிழ் தரப்புக்கள் அந்த நிலைப்பாட்டை சுயலாப அரசியலுக்காகவேனும் பின்பற்றுகின்ற சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஈ.பி.டி.பி. வலியுறுத்துகின்ற 13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாணசபை முறைமையே சாத்தியமானது என்பதை சர்வதேச நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் வெளிப்படையாக அறிவித்து வருகின்றமையையும் சுட்டிக்காட்டினார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் நடத்திய கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சியின் யாழ். தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அண்மையில் கடிதம் எழுதிய தரப்புகளாக இருந்தாலென்ன, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சர்வ கட்சி மாநாட்டில் கலந்து கொண்ட தரப்புக்களாக இருந்தாலென்ன, 13 ஆவது அரசியல் திருத்தத்தின் அடிப்படையிலான மாகாண சபையையே வலியுறுத்தியுள்ளன.

இதை கடந்த 30 வருடங்களுக்கு மேலாக ஈ.பி.டி.பி. வலியுறுத்திய சந்தர்ப்பங்களில் எல்லாம், எம்மைத் தமிழ் மக்களுக்கு விரோதமானவர்களாகவும் – தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு முரணான கருத்துக்களை தெரிவிப்பவர்களாகவும் – இதேதரப்பினர் மக்களிடம் கூறிவந்தனர்.

சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து தமிழ் மக்களுக்கு மட்டற்ற அதிகாரங்களுடனான தீர்வை வழங்கும் என்றும் கூறிவந்தனர்.

ஆனால், ஈ.பி.டி.பி. கட்சியால் முன்வைக்கப்படுகின்ற நிலைப்பாடுகளும் பொறிமுறைகளுமே யதார்த்தமானவை என்பது சர்வதேச நாடுகளாலும் சர்வதேச அமைப்புக்களாலும் வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தமது அரசியல் இருப்பிற்காக காலத்துக்குக் காலம் சுருதியை மாற்றுகின்ற குறித்த தமிழர் தரப்புக்கள் இப்போது எமது வழிமுறைக்கு வந்துள்ளன.

இதனை மக்கள் மத்தியில் கொண்டு சென்று தெளிபடுத்துவதன் மூலம் எதிர்காலத்திலாவது மக்கள் ஏமாறாமல் சரியானவர்களைத் தெரிவு செய்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.



## பயணித்துக் கொண்டிருந்த கார் தெமட்டகொடவில் பற்றி எரிந்தது

தெமட்டகொட பேஸ்லைன் மேம்பாலத்தில் பயணித்துகார் ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

பொரளையில் இருந்து ஒருகொடவத்தை நோக்கி பயணித்த காரில் அவ்வேளையில் இருவர் இருந்தனர் எனவும், அவர்களுக்குக் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பகுதியில் காரின் இயந்திரம் தீப்பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் சம்பவ இடத்துக்கு வந்த போது தீ வேகமாக பரவி கார் முற்றாக எரிந்து நாசமாகியிருந்தது.

காரில் பயணித்தவர்கள் கடுவெல பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

## குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைக்கப்படும் உணவுப் பொருள் வாங்குவோருக்கு எச்சரிக்கை!

மின்வெட்டு காரணமாக விற்பனை நிலையங்களில் குளிர்சாதனப் பெட்டிகளில் விற்பனைக்காக வைக்கப் பட்டுள்ள உணவுப் பொருள்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் காலாவதியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் இவ்வாறான உணவுகளை விற்பனை செய்த 407 விற்பனையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைக்கப்படும் உணவுப் பொருள்களை கொள்வனவு செய்யும் போது பொதுமக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## விசேட அதிரடி படையால் மரக் கடத்தல் முறியடிப்பு



வவுனியா – தவசிக்குளம் பகுதியில் சட்ட விரோதமான முறையில் முதிரை மரக்குற்றிகளைக் கடத்தி சென்ற வாகனம் மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினரால் மடக்கிப்பிடிக்கப்பட்டு நெளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் நேற்று (சனிக்கிழமை) அதிகாலை இடம்பெற்றதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரகசிய தகவலின் அடிப்படையில் மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும் இந்தக் கடத்தலில் ஈடுபட்ட ஓமந்தை, கூமாங்குளம், தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த மூவரைக் கைது செய்தமையுடன், கடத்தலிற்குப் பயன்படுத்திய கப் ரக வாகனம் மற்றும் 10 முதிரை மரக் குற்றிகள் என்பன கைப்பற்றப்பட்டு நெளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.03.2022இல் வெளியிடப்பெற்றது.

## சர்வதேச நாணய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில், நம்பகமான, தெளிவான மூலோபாயங்களை இலங்கை அரசு அமுலாக்குவது உடனடி அவசியப்படாகும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

பாதிப்புமிக்க குழுக்களைப் பாதுகாத்து, வறுமையைக் குறைப்பதற்கு சமூக பாதுகாப்பு முறைமைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இலங்கையின் பொருளாதாரத்துக்குத் தாக்கம் செலுத்தியுள்ள பிரதான விடயம் குறித்து இந்த அறிக்கையில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் முக்கிய பிரச்சினைகள் குறித்து இந்தஅறிக்கைகவனம்செலுத்துகின்றது.

கொரோனா பரவல் இலங்கையின் பொருளாதாரத்தைக் கடுமையாகப் பாதித்துள்ளதுடன், சுற்றுலாத்துறையின் வருமான இழப்பு அதில் பிரதானமாக உள்ளது.

தொற்றுநோய்க்கு முந்தைய வரி குறைப்புகள் மற்றும் கொரோனா தாக்கம் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் நிதிப் பற்றாக்குறையானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவீதத்தைக் கடந்தது.

கடந்த ஆண்டு, அரச கடன், மொத்த உள்நாட்டு உற்பத்தியில நூற்றுக்கு 119 சதவீதமாக உயர்ந்ததுடன், சர்வதேச மூலதனச் சந்தைகளுக்கான அணுகல் இல்லாமல்போனது.

வெளிநாட்டு கடன் தீர்ப்பனவுகள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை விரிவாக்கம் காரணமாக அந்நிய செலாவணி பற்றாக்குறை உருவாகியுள்ளது.

இலங்கையானது, கொடுப்பனவு சமநிலை மற்றும் இறையாண்மைக் கடன் நெருக்கடியை அனுபவிக்கத் தொடங்கியதுடன், வெளிநாட்டு இருப்புக்கள், கடனைச் செலுத்துவதற்குப் போதுமானதாக இன்மையால், அரச கடன் சுமை அதிகரித்தது.

பரிமாற்ற கையிருப்பைக் கட்டியெழுப்புவதற்கு அதிகாரிகள் குறுகிய கால நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும், இந்த வருடத்திற்கு அப்பால் இலங்கையால் எவ்வாறு பாரிய கடன் சேவையை பேண முடியும் என்பது தெளிவற்றதாகும்.

இந்தச் சூழலில் நிதி ஸ்திரத்தன்மையைக் கட்டியெழுப்புவது, வருமான வளர்ச்சியின் அடிப்படையில் அமைய வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

வட் எனப்படும் பெறுமதி சேர் வரி மற்றும் வருமான வரி விகிதங்களை அதிகரித்தல் மற்றும் விரிவாக்கல் நடவடிக்கைகள் மூலம் சீர்திருத்தங்கள் செயற்படுத்தப்பட வேண்டும்.

நிதி அபாயத்தைக் குறைக்கும் வகையில், வலுசக்தி விலை நிர்ணயம் சீராக்கப்பட வேண்டும் என்பதுடன், நட்டத்தில் இயங்கும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களைமீள்கட்டமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## கோட்டாவுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியுடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சந்திப்பு நடைபெற்றபோதும் கூட இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு தொடர்பில் எந்தவிதமான பேச்சுகளும் நடக்கவில்லை என்பது ஊடகங்கள் மூலம் உறுதியாகின்றது.

அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பக்கத்திலிருந்து 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கான அழுத்தங்கள் அரசுக்கு வழங்கப்பட்டதாகவும் செய்திகள் வெளிப்படுத்துகின்றன. இது சம்பந்தமாக நாம் தெரிவித்து வந்த கருத்துக்கள் மீண்டும் மீண்டும் உறுதியாகின்றனவாகவேகருதுகின்றோம்.

கடந்த காலங்களில் புலம்பெயர் தமிழர்களைத் தடை செய்த அரசு தற்போது பொருளாதார நெருக்கடி எழுந்துள்ள போது அந்தப் புலம்பெயர்ந்த மக்களின் முதலீடுகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கின்றது.

புலம்பெயர் தமிழர்கள் மீதான தடையை நீக்குவதற்குக்கூட அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேசியுள்ளது. இது எதைக் காட்டுகின்றது என்றால் தடை என்பது இலங்கை அரசினுடைய தேசிய பாதுகாப்பு சம்பந்தமான விடயம் அல்ல என்பதே ஆகும்.

13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்ற ரெலோ, ஜனாதிபதியுடனான சந்திப்பை ஏன் புறக்கணித்தார்கள் என்பது கேள்விக்குறியே! அவ்வாறெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ வெளியேற வேண்டும் – என்றார்.

---

## போக்குவரத்துத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போக்குவரத்துத் திணைக்களம் என்பன இணைந்து நடத்தும் 'வீதி ஒழுங்குகளைப் பேணிப் பாதுகாப்பாகப் பயணிப்போம்' எனும் தொனிப்பொருளிலான நடமாடும் சேவை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே வடக்கு மாகாண மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுஜிவா சிவதாஸ் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு ஆகியோரின் நெறிப்படுத்தலில் நடைபெறவுள்ள இந்த நடமாடும் சேவைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை காலை 9மணி முதல் மதியம் 3 மணி வரை யாழ்ப்பாணம், கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபை வளாக கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளது.

பல ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்க்கப்படாத பிரச்சினைகளை இனங்கண்டு தீர்க்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவையில், வாகன உடைமை மாற்றங்கள், வாகன பதிவுப் புத்தகத்தில்திருத்தங்கள் மேற்கொள்ளல், வாகனத்தின் நிறைச் சான்றிதழைப் பெறல், வாகன உடைமை மாற்ற படிவங்களைக் கையேற்றல், சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை, விசேட தேவையுடைய வர்களுக்கான சாரதி அனுமதிப் பத்திரப் பரீட்சை, சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரத்தைப்பெற்றுக்கொள்ளல், பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களின் மாற்றம் தொடர்பான விடயங்கள், சாரதி அனுமதி பத்திரத்துக்கான மருத்துவ பரிசோதனை, வாகன இலக்கத் தகடுகளைப் பெற்றுக்கொள்ளல், 2015ஆம் ஆண்டு வரவு – செலவுத்திட்ட முன்மொழிவு அடிப்படையில் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிளுக்கான நிபந்தனை நீக்கம் போன்ற நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் போக்குவரத்தில் உள்ள இடர்பாடுகள் மற்றும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மக்கள் நேரடியாகக் கொழும்புக்குச் சென்று சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் உள்ள இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு மக்களுக்கு அருகில் இந்தச் சேவைகளை வழங்கும் நோக்கில் இந்த நடமாடும் சேவை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்த நடமாடும் சேவை தொடர்பான மேலதிக விவரங்களைப் பிரதேச செயலகங்களில் உள்ள மோட்டார் வாகனப் போக்குவரத்துப் பிரிவிலும், யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள பிரதி மோட்டார் போக்குவரத்து ஆணையத்திலும், வடக்கு மாகாணப் போக்குவரத்துப் பிரிவிலும் பெற்றுக்கொள்ள முடியும் – என்றார்.

இது தொடர்பான ஊடக சந்திப்பின் போது வடக்கு மாகாண மோட்டார் திணைக்கள உதவி ஆணையாளர் இ.சிவ கரன், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் ஆகியோரும், மோட்டார் போக்குவரத்து திணைக்கள நிர்வாக ஆணையாளர் சுசந்த ஜயதிலக, மோட்டார் போக்குவரத்து திணைக்கள பிரதி ஆணையாளர் சஞ்சீவனி மற்றும் காஞ்சனா பொன்சேகா ஆகியோரும் பங்கேற்றனர்.

---

## 30இல் 'பிம்ஸ்டெக்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேபாளம், பூட்டான், மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகள் 'பிம்ஸ்டெக்' அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

பிம்ஸ்டெக் அமைப்பின் அரச தலைவர்கள் மாநாடு கடைசியாக 2018 இல் நேபாளம் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்றது. இம்முறை இலங்கையில் நடைபெறுகின்றது.

மாநாட்டில் பங்கேற்பதற்காக தாய்லாந்து பிரதமர் இலங்கை வரவுள்ளார். 'பிம்ஸ்டெக்' அமைப்பின் அடுத்த தலைமைப் பொறுப்பை தாய்லாந்தே ஏற்கவுள்ளது. அந்தப் பதவியைத் தாய்லாந்து பிரதமர் பொறுப்பேற்பார். ஏனைய நாடுகளின் பிரதமர்கள் 'காணொளி' தொழில்நுட்பம் ஊடாகவே மாநாட்டில் பங்கேற்பார்கள்.

அரச தலைவர்கள் மாநாடு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் எதிர்வரும் 30ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும்.

அத்துடன், 'பிம்ஸ்டெக்' அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்கும் மாநாடு – கலந்துரையாடல் நாளைமறுதினம் 29ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டில் மண்டபத்தில் நடைபெறும். 7 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் கொழும்பு வருவார்கள்.

அதேபோல் வெளிவிவகார அமைச்சின் செயலாளர்களின் கலந்துரையாடல் – சந்திப்பு இன்று நடைபெறும்.

மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் நாளை இலங்கை வரவுள்ளார். 30ஆம் திகதிவரை அவர் நாட்டில் தங்கியிருப்பார்.

பிம்ஸ்டெக் அமைப்பின் பொதுச் செயலாளர் நேற்று இலங்கை வந்தடைந்தார்.

---

## அரசுக்கு எதிராகப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிரணிகள் இதற்கு ஆதரவு வழங்கும் பட்சத்தில், அடுத்த நாடாளுமன்ற அமர்விலேயே நம்பிக்கையில்லாப் பிரேரணையை முன்வைக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பதற்குக் குறைந்த பட்சம் 75 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் அவசியம். அந்தப் பலம் 11 பேர் அணியிடம் இல்லை.

எனவே, எதிரணிகள் ஊடாக இதற்கான நகர்வில் 11 பேர் அணி ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

---

## நாளை அமைச்சர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பான பகுப்பாய்வுகள், புள்ளிவிவர ரீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# மரண அறிவித்தல்

மண்ணில் மலர்வு
04
03
1943



விண்ணில் உதிர்வு
24
03
2022

## திருமதி. சரோஜினிதேவி இராஜரட்ணம்

யாழ்ப்பாணம் கோண்டாவில் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி அவர்கள் 24.03.2022 வியாழக் கிழமையன்று சிவபதம் அடைந்தார். இவர் ( வடகோவை பூ.க. இராஜரட்ணம் ஓய்வுநிலை அதிபர், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி ) அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் பரமேஸ்வரி காலஞ்சென்ற பூமணி இராசமணி ஜெயக்குமார் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கந்தப்பு சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகளும் கலாநிதி பிரேம்ராஜ் (அவுஸ்திரேலியா), சசிகலா (லண்டன்), உதயராஜ் (லண்டன்),மேகலா (லண்டன்) ஆகியோரின் அன்பு தாயாரும் நாராயணி ஸ்ரீதரன் வனுஜயா திருநாவுக்கரசு ஆகியோரின் அன்பு மாமியாரும் லவின்ராஜ், அஸ்வின்ராஜ், ஜசின்ராஜ், சரண்ராஜ், பிரவீன்ராஜ் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் திலக்சன், பிவித்திகா, ஜக்சனா, மதுஜனா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவுமாவார். அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக 26.03.2022 சனிக்கிழமை அன்று பொறளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 9.00 மணிமுதல் மாலை 4.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் ஈமக்கிரியைகள் நடைபெற்று 11 மணியளவில் பொறளை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

**தகவல்**

வடகோவை, பூ.க. இராஜரட்ணம் - கணவர் - 0112582531, 0779625405
பிரேம்ராஜ் (மகன்) 0061478005488, சசிகலா (மகள்) 00447784384796
உதயராஜ் (மகன்) 0044771042485, மேகலா (மகள்) 00447908603770

முகவரி: 36/2A, 37 வது ஒழுங்கை, வெள்ளவத்தை,கொழும்பு-06